


கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 140 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 14 – சனிக்கிழமை 30 டிசம்பர் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 140 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 14 - Saturday 30 December 2023 - Madurai 10 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2023) தலைமைச் செயலகத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ச.இராமதாசு அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர். துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே.மணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2023) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதிகனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர் /கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# மழைவெள்ளப் பாதிப்புகள் - நிவாரண உதவிகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு !

**சென்னை, டிச. 30-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2023) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர் /கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மழை வெள்ள பாதிப்புகளைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகள் மற்றும் நிவாரண உதவிகள் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

பெருமழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களில் நிவாரணத் தொகை விநியோகம் தொடங்கியது தொடர்பாக தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா எடுத்துரைத்தார்.

அதி கனமழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அலுவலர்களுக்கு இது தொடர்பாக அறிவுரைகள் வழங்கியதை அவர் குறிப்பிட்டார்.

17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பெய்த அதிகனமழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதிப்பின் அடிப்படையில் நிவாரணத் தொகையாக 6,63,760 குடும்பங்களுக்கு குடும்ப அட்டையின் அடிப்படையில் ரூ,6,000/ நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கவும், 14,31,164 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.1,000/ வழங்க அரசு ஆணைகள் பெறப்பட்டதன் அடிப்படையில், மேற்கண்ட 4 மாவட்டங்களின் மாவட்ட ஆட்சி தலைவர்கள், காவல் ஆணையாளர்கள், காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களுடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நேற்று (28.12.2023) முன்னேற்பாடுகள் கூட்டம் நடத்தி இப்பணியினை சிறப்புடன் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கியிருந்தார்.

தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அரசு அறிவித்தபடி, நிவாரணத் தொகை வழங்கும் பணி நேற்று தொடங்கியது.

### தாய்மார்கள் கருத்து

தமிழ்நாடு அரசின் இந்த நிவாரணத் தொகையும், கூடவே அரிசி உள்ளிட்ட பொருள்களும் சிரமமான இந்த கால கட்டத்தில் தங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்ததாக பொது மக்கள் குறிப்பாக தாய்மார்கள் தெரிவித்தனர்.

வரலாறு காணாத பெரு மழை பெய்து அதன் காரணமாக தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன. தென்காசி, குமரி மாவட்டங்களும் கனமழையால் பாதித்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் சென்று நிவாரண உதவிகள் வழங்கினார்.

### மீட்புப் பணிகளில் அமைச்சர்கள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் நிவாரண உதவிகளை வழங்கினார்.

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதா ஜீவன் உள்ளிட்ட 11 அமைச்சர்கள், கனிமொழி கருணாநிதி எம்.பி., மற்றும் உயரதிகாரிகள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லை, தூத்துக்குடியில் அதிகம் பாதிக்கப்பட்டோருக்கு தலா ரூ.6,000 நிவாரணம்;

நெல்லை, தூத்துக்குடியில் பகுதியளவு பாதிக்கப்பட்டோருக்கு தலா ரூ.1,000 நிவாரணம்;

தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு தலா ரூ.1,000 நிவாரண நிதி என பெருமழையால் பாதிக்கப்பட்ட நெல்லை, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி நிவாரண நிதி வழங்கும் பணி தொடங்கியுள்ளது.

பெருமழையால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகம் பாதிக்கப்பட்ட உள்ள தாலுகாக்களில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் நிதி மற்றும் 5 கிலோ அரிசியும், பகுதியளவு பாதிக்கப்பட்டோருக்கு தலா ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

இதேபோல் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியும் வழங்கவும் முதலமைச்சர் ஆணையிட்டிருந்தார். அதன்படி, நிவாரண நிதி பணி வழங்கும் பணி 4 மாவட்டங்களிலும் இன்று தொடங்கியது. நெல்லை மாவட்டத்தில் 796 நியாயவிலை கடைகள் மூலம் 5 லட்சத்து 4,357 குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரண நிதி வழங்கும் பணி நடைபெறுகிறது.

### தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதி கன மழை காரணமாக பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டது. சேதமடைந்த பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ள, மொத்தம் 11 அமைச்சர்களை, முதலமைச்சர் நியமித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் தூத்துக்குடியில் ஆய்வு மேற்கொண்டனர்.

---

## தே.மு.தி.க. தலைவர்

# விஜயகாந்த் இறுதி ஊர்வலம்; பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி !

**சென்னை, டிச. 30-**

**மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடலுக்கு பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். தீவுத் திடலில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.**

முன்னதாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல் ஹாசன் மற்றும் முன்னணி நடிகர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவர்களின் உடல் சாலி கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டது.

### முதல்வர் நேரில் சென்று அஞ்சலி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் உடன் சென்றிருந்தனர். மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடல் முழு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

விஜயகாந்த் இல்லத்தில் ஏராளமான கட்சித் தொண்டர்கள், சினிமா துறையினர், சின்னத்திரை நடிகர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் அங்கு அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

பின்னர் விஜயகாந்தின் உடல் கோயம்பேடு தே.மு.தி.க. அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் இரவு வரை ஏராளமானோர் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நேற்று (29.12.2023) காலை விஜயகாந்த் உடல் தமிழ்நாடு அரசு அறிவிப்பின்படி தீவுத் திடலுக்குக் கொண்டு செல்லப்பட்டு பகல் 2.30 மணி வரை பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

விஜயகாந்த் உடலுக்கு முதல்வரின் சகோதரி திருமதி.செல்வி செல்வம், சகோதரர் மு.க.தமிழரசு உள்ளிட்ட ஏராளமானோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி திருமதி. பிரேமலதாவுக்கு ஆறுதல் கூறினர்.

தீவுத் திடலில் இருந்து மன்றோ சிலை வரை திரண்ட மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த ஏராளமான காவல்துறையினர் தடுப்புகள் அமைத்து யாருக்கும் பாதிப்பின்றி பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

### முழு அரசு மரியாதையுடன் உடல் அடக்கம்!

தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் இந்த இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

அவரது இறுதி ஊர்வலம் நிறைவாக, கோயம்பேடு தே.மு.தி.க. அலுவலக வளாகத்தை சென்றடைந்து நேற்று மாலை 6.00 மணியளவில் முழு அரசு மரியாதையுடன் காவல்துறையினர் – வானை நோக்கி 72 குண்டுகள் முழங்க விஜயகாந்தின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

---

## தென் மாவட்டங்களில்

# 31 ஆம் தேதி மீண்டும் கனமழைக்கு வாய்ப்பு !

*சென்னை, டிச.30-*

ஜனவரி மாதம் வரை பருவமழை நீடிக்க இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவ மழை கடந்த அக்டோபர் மாதம் தொடங்கி, டிசம்பர் மாதத்துடன் நிறைவு பெறும். ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரை பருவமழை நீடிக்க இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் 31ந் தேதி வரை சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், அதிலும் 31ந் தேதி தென் மாவட்டங்களில் கன மழைக்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழக கடலோர மாவட்டங்களில் சில இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், இன்று (30.12.2023) தென் மாவட்டங்களில் சில இடங்களிலும், வட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (31ந் தேதி) தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழையும், தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 30-12-2023

# ஒட்டுக் கேட்க ஒரு சட்டமா?

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள ஒரு சட்டம், மொபைல் போன் நெட்வொர்க்கை கையகப்படுத்தும் திட்டமாக அமைந்துள்ளது. இதன்மூலம் தனி நபர்களுக்கு இடையேயான தகவல் தொடர்புகளையும் ஒன்றிய அரசு தலையிட்டு எடுத்துக் கொள்ள முடியும். 'மொபைல் போன் நெட்வொர்க்கை அரசு கையகப்படுத்தலாம்' என்றே பல செய்தி நிறுவனங்கள் தலைப்பிட்டுள்ளன.

நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு, பொது அவசரச் சூழல் போன்ற காரணங்களுக்காக, 'மொபைல்போன் நெட்வொர்க்' உட்பட தொலைத்தொடர்புக் கட்டமைப்புகளை, ஒன்றிய அரசு தற்காலிகமாக தன்வசப்படுத்திக் கொள்ளும் வகையில், புதிய தொலைத்தொடர்பு மசோதா, மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்திய தந்தி சட்டம், இந்திய கம்பியில்லா தந்தி சட்டம் போன்ற பழைய சட்டங்களுக்கு மாற்றாக, நவீன தொழில்நுட்பக் காலத்துக்கேற்ப, தொலைத் தொடர்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடந்த 138 ஆண்டுகளாகப் பின்பற்றி வந்த தொலைத் தொடர்புச் சட்டத்தினைத் திருத்த முயற்சிக்கிறது பா.ஜ.க. அரசின் சட்டம். தொலைத் தொடர்புத் துறையில், ஊடகங்கள் வெளியிடும் செய்திகள், தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்துவதாக இருப்பின், ஒன்றிய அரசு அக் குறிப்பிட்ட ஊடகத்தை முடக்கலாம் என்ற பிரிவையும் இதில் இணைத்திருக்கிறது. இது முழுக்க முழுக்க ஊடக சுதந்திரத்தைப் பறிக்கும் செயல் என எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற புகைக் குண்டுவீச்சு விவகாரம் தொடர்பான அமளிக்கு இடையே இந்த மசோதாவை, ஒன்றிய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தாக்கல் செய்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு, அவசர நிலை, பேரிடர் நிர்வாகம், நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு போன்ற காரணங்களுக்காக, மொபைல் போன் உள்ளிட்ட தொலைத்தொடர்பு நெட்வொர்க்கை, ஒன்றிய அரசு அல்லது மாநில அரசு அல்லது அரசுகளால் நியமிக்கப்படும் அதிகாரிகள் கையகப்படுத்த இந்த மசோதா வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலாக உள்ள தகவல் பரிமாற்றங்களைத் தடுத்து நிறுத்துவது, தொலைத் தொடர்புச் சேவையைத் துண்டிப்பது போன்ற அதிகாரமும் அரசுக்கு வழங்கப்படுகிறது. இதன்படி, தனிநபர்களுக்கு இடையேயான தகவல் தொடர்புகளையும் ஒன்றிய அரசு தலையிட்டு எடுத்துக் கொள்ள முடியும்.

ஒன்றிய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்கள், பணி நிமித்தமாக அனுப்பும் செய்திகளில் அரசுகள் தலையிடாது. அதே நேரத்தில் தேசியப் பாதுகாப்பை மீறுவதாக இருந்தால் மட்டும் அதில் அரசுகள் குறுக்கிட முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதேநேரத்தில் சட்டவிரோதமாக தொலைபேசியை ஒட்டுக்கேட்போருக்கு மூன்று ஆண்டுகள் சிறை, 2 கோடி ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

இந்தப் புதிய சட்டத்தின்படி, தொலைத் தொடர்பு தொடர்பான சர்ச்சைகளுக்குத்தீர்வுகாணும்அமைப்பும், ஆணையமும் அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மசோதா நிதி மசோதாவாகக் கொண்டு வரப்பட்டதாலும், இதற்கு மாநிலங்களவையில் ஒப்புதல் பெற வேண்டியதில்லை என்பதாலும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மசோதாவில் தன்மறைப்பு ( தனிமனித பிரைவசி) சார்ந்த பிரச்சினைகள் இருப்பதாகவும், எனவே, நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு இதனை அனுப்ப வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இரண்டுநபர்களுக்கு இடையேபகிரப்படும்செய்திகளை, தேவைப்பட்டால் தொலைத்தொடர்பு நிறுவனம் அரசுக்கு வழங்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவது மற்றும் பொதுக் கொள்கையின் அடிப்படையில், ஒன்றிய அரசால் கண்காணிக்கப்பட்டு, இணைப்பு துண்டிக்கப்படும் என்றும், உளவுபார்க்கும் கருவிகளே இல்லாமல் இந்தச் சட்டத்தின் துணைக்கொண்டு ஒன்றிய அரசால் ஒருவரை ஒட்டுக்கேட்க முடியும்; இதற்கு மாநில அரசுக்கும் உரிமை உண்டு என்றும் கூறப்பட்டாலும், தொலைத்தொடர்புத்துறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அதன் முழுமையான கட்டுப்பாடு ஒன்றிய அரசுக்குச் செல்கிறது.

**தொலைத் தொடர்பு ஊடகங்களின் உரிமங்கள் தொடர்பான புது வரையறையும், இம்மசோதா முன்மொழிகிறது. இதன் மூலம், தொலைத் தொடர்புச் சேவைகள், கருவிகள், உள்கட்டமைப்பு, வலைப்பின்னல் போன்ற அனைத்தும் ஒன்றியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற கட்டாயம் எழுந்துள்ளது. இதன் மூலம் கருத்துரிமை முழுவதுமாகப் பறிக்கப்படுகிறது.**

**ஒவ்வொரு நாளும் நடக்கக்கூடிய செய்திகளை, பல்வேறு பகுதிகளிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும் சேகரித்து உலக மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஊடகத்தைக் கட்டுப்படுத்த நினைப்பது, நாட்டின் வெளிப்படைத் தன்மைக்கு மிகப்பெரிய சவாலாக அமையும். இந்த மசோதா மக்களின் அடிப்படை உரிமையை கேள்விக்குறியாக்கப் பார்க்கிறது.**

இந்த மசோதா மிகமிகக் கடுமையானது; இணையத்தை முடக்குவது ஆகும். வாட்ஸ்அப், டெலிகிராம், இமெயில் ஆகிய சேவைகளை இது குறிவைக்கிறது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு நலன் கருதி என்று ஒன்றிய அரசுக்கு வழங்கும் அதிகாரங்கள் பெரும்பாலும் சர்ச்சைக்குரியவை ஆகும். இஸ்ரேலிய நிறுவனம் செய்த பெகாசஸ் நடவடிக்கைகள், இனி சட்டபூர்வமானவை ஆகலாம். 'நாட்டுக்கு ஆபத்தானவர்கள்' என்று யாருடைய போனையும் இடை மறித்துக் கேட்கலாம்.

**இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் மென் பொருள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 50 ஆயிரம் பேரின் செல்போன் தகவல் திருடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது. இந்தச் செய்தியை 'தி கார்டியன்' இதழ் வெளியிட்டுள்ளது. 'வாஷிங்டன் போஸ்ட்' இதழும் வெளியிட்டுள்ளது. இது இந்திய நாடாளுமன்றத்தை அதிர வைத்தது. இறுதியாக பிரச்சினையே கிடப்பில் போடப்பட்டது.**

மணிப்பூர் மற்றும் ஜம்மு காஷ்மீரில் நடத்தப்பட்டது போன்ற இணைய முடக்கத்தை இனி எந்த மாநிலத்தில் செய்தாலும் அதனை சட்டபூர்வமாகச் செய்யலாம்.

பொங்கல் பண்டிகை:

## காட்டன் சேலைகள் உற்பத்தி தீவிரம்!

ஆண்டிபட்டி, டிச. 30 –

ஆண்டிபட்டி அருகே சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காட்டன் சேலைகள் உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளது.தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிகளும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களும் நெசவு தொழில் செய்து வருகின்றனர்.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் அதிகளவு காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகைகள் தொடங்குவதற்கு 2 மாதங்களுக்கு முன்பாகவே பொங்கல் பண்டிகைக்கென காட்டன் சேலைகள் உற்பத்தி தொடங்கி விட்டது. இந்த காட்டன் சேலைகள் உற்பத்தி தீவிரமாக நடைபெற்று வருவதுடன் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. மேலும் பொங்கல் பண்டிகைக்காக உற்பத்தி செய்யப்பட்ட காட்டன் சேலைகள் அதிக அளவு வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்படும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2023) தலைமைச் செயலகத்தில், மாலை முரசு நிர்வாக இயக்குநர் இரா. கண்ணன் ஆதித்தன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

# கிளாம்பாக்கத்தில் - கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, டிச. 30-**

**சென்னையில் விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு - செங்கற்பட்டு மாவட்டம் - கிளாம்பாக்கத்தில் கழக அரசு, ரூ.400 கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்டமாகக் கட்டியுள்ள, "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தின்" திறப்பு விழா இன்று காலை மிகச் சிறப்புற நடைபெறுகிறது.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" திறந்து வைத்து அதனை மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.**

அதன் விபரம் வருமாறு:-

சென்னையில் ஆண்டுதோறும் மக்கள்தொகை அதிகரித்து வருவதற்கு ஏற்ப வாகனங்களின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டே செல்வதறிவோம்! இதனால் சென்னையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில்தான் சென்னையில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கத்தில் சென்னை புறநகரில் பெரிய பேருந்து முனைய மொன்று அமைக்க கழக அரசு எண்ணியது. அதன்படி செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமான பஸ் நிறுத்தத்துடன் கூடிய முனையம் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டது.

இதையடுத்து 59.86 ஏக்கர் பரப்பளவில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் புதிய பஸ் முனையம் கட்டும் பணி தொடங்கியது. சுமார் 1,200 மீட்டர் தூரத்துக்கு மழை நீர் கால்வாய் அமைக்கப்பட்டது. இந்தப் பணிகள் முழுவதுமாக முடிந்த நிலையில் பொங்கல் திருநாளையொட்டி கிளாம்பாக்கம் பேருந்து முனையம் திறக்கப்படுகிறது. முன்னதாக இதனையொட்டி பேருந்துகள் சோதனை ஓட்டமும் தொடங்கி நடைபெற்றது.

இந்நிலையில் இன்று (டிசம்பர் 30ம் தேதி) சென்னை கிளாம்பாக்கத்தில் மிகப் பிரமாண்டமாக உருவாகியுள்ள 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை' முதல்வர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

மழை வெள்ள பாதிப்பால் பேருந்து முனையம் திறப்பு விழாவை பிரமாண்டமாக நடத்தாமல் எளிய முறையில் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி இன்று காலை 11 மணிக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள், இப்பேருந்து முனையத்தை திறந்து வைத்து பேட்டரி வாகனத்தில் சுற்றிப் பார்க்கிறார்.

இதனையடுத்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வர உள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மக்கள் பயன்பாட்டுக்கு வருவதன் மூலம் சென்னையில் வாகன நெரிசல் ஓரளவு கட்டுக்குள் வரும் எனின் அது மிகையல்ல;

இந்தப் பேருந்து முனையத்தின் சிறப்புகள் வருமாறு:

- பேருந்து நிலையத்தின் மொத்த பரப்பளவு 88.52 ஏக்கர், கட்டத்தின் மொத்த பரப்பளவு 60,451.41 சதுர மீட்டர்களாகும்.
- பேருந்து நிலையம் முழுப் பயன்பாட்டிற்கு வரும் பொழுது நாள் ஒன்றுக்கு 1 லட்சம் மக்கள் பயணிப்பார்கள்.
- மருத்துவமனை, 4 உணவகங்கள் மற்றும் 100 கடைகள் இம்முனையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.
- 6 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு நீருற்று, நடைபாதையுடன் கூடிய பூங்கா இப்பேருந்து முனையத்துக்கு எழில் சேர்க்கிறது. 2,310 பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்படும்.
- 540 கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் உள்ளன.
- 4 குடிநீர் (ஆர்.ஓ. பிளாண்ட்) சுத்திகரிப்பு நிலையங்களும் - 12 இடங்களில் குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை - சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னையை அடுத்த கிளாம்பாக்கத்தில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத் திறப்பு விழா" குறித்த நிகழ்ச்சி நிரல் விபரம் வருமாறு:-**

இன்று (30.12.2023) காலை 11.00 மணிக்கு விழா தொடங்குகிறது.

முதல் நிகழ்வாக - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிளாம்பாக்கம் பேருந்து முனையக் கட்டிடத்தின் கல்வெட்டினையும் பேருந்து முனையக் கட்டிடத்தினையும் திறந்து வைக்கிறார்.

அதனையடுத்து - பேருந்து முனைய வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து - மின்கல ஊர்தியில் பிரதானக் கட்டிடத்திலிருந்து பேருந்து நடை மேடைக்கு வருகை தருகிறார்.

விழாவில் - இந்து சமயம், அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகிக்கிறார்.

அமைச்சரின் வரவேற்புரையை அடுத்து - முதல்வர் அவர்கள் அரசுப் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைக்கிறார்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி நன்றியுரையாற்றுகிறார்.

நன்றியுரையை அடுத்து முதலமைச்சர் அவர்கள் மின்கல ஊர்தியில் பேருந்து விழா மேடையிலிருந்து பிரதானக் கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கிற்கு வருகை புரிகிறார்.

அங்கு - கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தின் செயல் விளக்க குறும்படத்தை பார்வையிடுகிறார். (3 நிமிடங்கள்)

மேலும் இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.


## கலைஞர் மீது மிகுந்த மரியாதை கொண்டவர்!

### தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு அமைச்சர் துரைமுருகன் இரங்கல்!



விஜயகாந்த்
நடிகர் என்ற பந்தா இல்லாதவர்1
பழகுவதற்கு இனிய நண்பர்!
தமிழ் மொழி மீதும்,
தமிழ் மக்கள் மீதும்
அதிக பற்று கொண்டவர்!
தமிழுக்காக எந்தத் தியாகத்திற்கும்
தயாராக இருந்தவர்!
கலைஞர் மீது மிகுந்த மரியாதை கொண்டவர்!
அவருடைய மறைவு என்பது
ஜாதி, மதம், மொழி கடந்து,
ஏன் நாடு கடந்தும் கூட
பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது!
அவரை இழந்து வாடும்
அவருடைய குடும்பத்தினருக்கும்,
தொண்டர்களுக்கும்,
திரையுலக நண்பர்களுக்கும்
என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அவருக்கு எனது அஞ்சலி....

**அமைச்சர் துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்



சென்னையில் நேற்று முன்தினம் (28.12.2023) நடைபெற்ற வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கேரளாவிற்கு திரும்பிய கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழியனுப்பி வைத்தார்.

## மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது!

# இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பைக் காத்திட இணைந்து போராடுவோம்!

### “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தல்!

**சென்னை.டிச.30–**

**“மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. எனவே இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பை காத்திட இணைந்து போராடுவோம்” என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு விழாவில் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தியுள்ளார்.**

*சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வைக்கம் சத்யாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் வருமாறு:*

வைக்கம் சத்யாகிரகம் இந்திய வரலாற்றில் இணையற்ற மக்கள் இயக்கம். அதன் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக நாங்கள் இங்கு கூடியுள்ளோம். வைக்கம் சத்யாகிரகத்தில் பங்கேற்றதற்காக கேரளாவும் தமிழ்நாடும் பெருமை கொள்கின்றன. வைக்கம் சத்யாகிரகம் மற்றும் அதன் பாரம்பரியம் என்று வரும்போது, நமது தமிழ் சகோதரர்கள் கேரள மக்களைப் பற்றி பெருமிதம் கொள்கிறார்கள் என்பதற்கு சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டம் ஒரு சான்றாகும். வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவு கூரும் வகையில் இந்த சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்த எனது அன்புச் சகோதரரும் தோழருமான தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளாவில் பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. மருமரக்கால் சமரம், அருவிப்புரம் பிரதிஷ்டை, வில்லுவண்டி சாமரம், கல்லுமலை சமரம், கிருர்வாயூர் சத்யாகிரகம் போன்றவை அவற்றில் அடங்கும். மறுமலர்ச்சி இயக்கங்களின் இந்த நீண்ட சங்கிலியில் வைக்கம் சத்யாகிரகம் ஒரு முக்கிய இணைப்பு. இருப்பினும், இது தனித்துவமானது,

இது மற்றவற்றிலிருந்து தனித்து நிற்கிறது. மற்ற இயக்கங்களிலிருந்து இது வேறுபட்டது எப்படி என்றால் சமூக சீர்திருத்தத்தில் கவனம் செலுத்திய மறுமலர்ச்சி இயக்கங்களும், தேச விடுதலைக் காகப் போராடிய காலனிய எதிர்ப்பு இயக்கமும் வைக்கம் சத்யாகிரகத்தில் ஒன்றாக இணைந்தது என்பதுதான். அதுவரை, மறுமலர்ச்சித் தலைவர்களும், சமூக அமைப்புகளும் தனித் தனியாகவே சீர்திருத்த இயக்கங்களை நடத்தி வந்தனர். ஆனால் வைக்கம் சத்யாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேசத்தின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுடன் கைகோர்த்தார்கள். எனவேதான் வைக்கம் சத்யாகிரகம் வரலாற்றில் முக்கியத்தும் பெற்றது.

**தீண்டாமையை ஒழிக்க குழு!**

சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் அரசியல் இயக்கங்கள் என இரட்டை தலைமையின் கீழ் சமூக அவலங்களுக்கு எதிராக இது போன்ற போராட்டம் வேறு எங்கும் நடந்ததாக எனக்கு தெரியவில்லை. ஸ்ரீ நாராயண குரு, சட்டம்பி சுவாமிகள், அய்யன்காளி போன்ற மறுமலர்ச்சித் தலைவர்கள் கலங்கரை விளக்கமாக இருந்து வழிகாட்டியிருக்காவிட்டால், கேரளாவில் இப்படி ஒரு முற்போக்கு இயக்கம் நடந்திருக்க வாய்ப்பில்லை. ஸ்ரீ நாராயண குரு வைக்கத்திற்கு சென்றார். அவர் தனது ஆசிரமத்தை சத்யாக்கிரக போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்காக திறந்துவிட்டார். தீண்டாமையை ஒழிக்க குழு ஒன்றும் அப்போது அமைக்கப்பட்டது

தெருவில் நடமாடும் சுதந்திரம் குடிமகனின் அடிப்படை உரிமை. ஆனால், நம் நாட்டில் அந்த காலத்தில் அதற்கு அனுமதி இல்லை. பெரும்பாலான மக்கள் பொது சாலைகளில், குறிப்பாக கோவில்களுக்கு அருகில் நடக்க அனுமதிக்கப்படவில்லை. தூய்மை மற்றும் தீண்டாமை பற்றிய கருத்துக்கள் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இது அடிப்படை உரிமையை மறுக்கும் செயல் என்பதால் உணர்வுபூர்மான எதிர்ப்பு எழுந்தது . வைக்கம் சத்யாகிரக போராட்டம் என்பது வர்ணாஸ்ரம தர்மம் என்ற மனித விரோத சாதி அமைப்புக்கு எதிரான ஒரு தெளிவான அறைகூவல் ஆகும். குருவாயூர் சத்யாகிரக போராட்டத்தின் மூலம் அது மேலும் முன்னேறியது. இந்தப் போராட்டங்கள் ஆலய நுழைவுப் பிரகடனத்துக்கு வழி வகுத்தது.

அந்த வகையில், வைக்கம் சத்யாகிரகம் நாடு முழுவதற்கும் முன்மாதிரியாக இருந்தது, அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் ஆலயங்கள் மற்றும் பொது சாலைகளில் சுதந்திரமாக நடமாடுவது தொடர்பான பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. குருவாயூரைத் தவிர, புனே, நாசிக் மற்றும் பலவற்றிலும் வைக்கம் சத்யாகிரகத்தின் தாக்கத்தைக் காண முடியும்.

**பெரியார் வருகையை பெருமையுடன் நினைவுகூர்வோம்!**

வைக்கம் சத்தியாகிரகத்தின் பொதுவான பாரம்பரியம் குறித்து பெருமை கொள்ள, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கும் பொதுவான பல விஷயங்கள் உள்ளன என்பதை ஆரம்பத்திலேயே நான் தெளிவாகக் கூறினேன். சாதி அமைப்பு, ஆரிய ஆதிக்கம், பிராமண மேலாதிக்கம் ஆகிய தீமைகளை எதிர்த்து வீரத்துடன் போராடிய தந்தை பெரியார் என்ற அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வைக்கத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சத்யாகிரக போராட்டத்தில் பங்கேற்க எங்களது மாநிலத்துக்கு வருகை தந்தார் என்ற வரலாற்று உண்மையை கேரளா எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்கிறது. உடல்நிலை குன்றிய நிலையிலும் போராட்டத்தில் கலந்துகொண்டு இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். வீரம் செறிந்த வைக்கம் சத்யாகிரக போராட்டத்திற்கு பிறகு, ‘வைக்கம் வீரர்’ என்ற பட்டத்தைப் பெற்றார் என்பது நினைவுகூரத்தக்கது. வைக்கம் சத்யாகிரகம், தந்தை பெரியாரின் அந்தஸ்தை உயர்த்தியதோடு, மற்ற விஷயங்களில் தீர்க்கமான மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்ற உத்வேகமூட்டியது.

மறுமலர்ச்சி இயக்கங்கள் குறித்து மிகப் பெரிய பார்வையை மக்களிடத்தில் ஏற்படுத்தியதிலும் வரலாற்று எல்லைகளுக்குள் அவற்றை கொண்டு சென்றதிலும் தமிழகம் எங்களுடன் ஒன்றாகஇருந்ததுஎன்பதும்குறிப்பிடத்தக்கது. வைக்கம் சத்யாகிரகத்தில் சி ராஜகோபாலாச்சாரி, சீனிவாச ஐயங்கார், அய்யாமுத்து கவுண்டர் போன்றவர்களின் பங்களிப்பு அந்த போராட்டத்தின் போது ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்குவகித்தது.

**வரும் நாட்களிலும் புது உற்சாகத்துடன் முன்னேறுவோம்!**

இத்தகைய புகழ்பெற்ற போராட்டங்களின் பாரம்பரியத்தை கேரளாவும் தமிழ்நாடும் மக்களுக்காக பகிர்ந்து கொள்கின்றன. வரும் நாட்களிலும், அதே போன்று புது உற்சாகத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். வெவ்வேறு எண்ணங்களை கொண்டோர் பொதுவான ஒரு குறிக்கோளுக்காக, ஒரு பெரிய நோக்கத்திற்காக ஒன்றிணைய முடியும் மற்றும் ஒன்றிணைக்க வேண்டும். எதிர்காலத்திலும் இப்படிப்பட்ட ஒற்றுமை தேவை, அதை சகோதர உறவுகளுடன், உறுதியான சக்திகளுடன் மிகப்பெரிய அளவில் உருவாக்க வேண்டும் என்பதை வைக்கம் சத்யாகிரகம் நமக்கு ஒரு முன்மாதிரியான பாதையை காட்டியிருக்கிறது.

**மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.**

**முன்மாதிரியான போராட்டம்**

வைக்கம் சத்தியாகிரகம் மற்றொரு முன்மாதிரியையும் முன்வைத்துள்ளது. , சமூகக் கொடுமைகள் அல்லது ஒடுக்குமுறைகளுக்கு மட்டும் ஆளானவர்கள், அதற்கு எதிராகப் போராடுபவர்களாக இருக்கக் கூடாது. இத்தகைய தீமைகள் மற்றும் அடக்குமுறைகளின் மோசமான பலனை அனுபவிப்பவர்கள் கூட அதை எதிர்த்துப் போராட ஒன்றுபட வேண்டும் என்பதுதான் அது. கே.கேளப்பன், கே.பி. கேசவ மேனன், மன்னத்து பத்மநாபன், குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாட், டி.கே.மாதவன், டி.ஆர்.கிருஷ்ணசுவாமி ஐயர், கண்ணன்தொடத்து வேலாயுத மேனன் ஆகியோர் வைக்கம் சத்யாக்கிரகத்தின் முன்னணியில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கத்தை சுதந்திரப் போராட்டத்துடன் இணைப்பதில் டி.கே.மாதவன் போன்றோர் ஆற்றிய பங்கு குறிப்பிடத் தக்கது. காக்கிநாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிறப்பு கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு மற்றும் ஆலய நுழைவு போராட்டத்திற்கு ஆதரவாக அவர் தீர்மானம் கொண்டு வந்தார். டி கே மாதவனுக்கு காந்தியடிகள் ஆதரவு அளித்தார். ஸ்ரீ நாராயண குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பிறகுதான் காந்தியடிகள் சத்யாகிரக போராட்டத்தை காணச் சென்றார். வைக்கம் சத்யாகிரகம் தொடர்பாக காந்தியடிகளின் முதல் கேரளா பயணம் அதுவாகும்.

**காந்தியடிகளுக்கே அனுமதி மறுப்பு**

காந்தியடிகள் வைக்கம் சென்றபோது,



அவர் ஒரு ‘அவர்ணன்’(பிற்படுத்தப்பட்டவர்) என்பதால், கோயிலின் நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த இந்தம்துருத்தி மன என்ற அமைப்பு ஆலயத்திற்குள் நுழைய அவருக்கு அனுமதி மறுத்தது. கோவிலை சுற்றியுள்ள பொது சாலைகள் அனைவருக்கும் திறக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தபோது, கோயில் நிர்வாக அதிகாரிகளான, ‘சவர்ணாஸ்’ அதை செய்ய மறுத்து விட்டனர். இன்று, அந்த மனா (நிர்வாகம்) அன்றைய காலத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட பின்னணியில் இருந்து வந்த தொழிலாளர்களை கொண்டு நிர்வாக அலுவலகமாக செயல்படுகிறது. இறுதியில் வரலாறு எந்த திசையில் முன்னேறுகிறது, எப்படி

## சாதிய அமைப்பை எதிர்த்து வீரத்துடன் போராடியவர் தந்தை பெரியார்!

முன்னோக்கி நகர்கிறது, எப்படி ஒரு முற்போக்கான திசையில் செல்கிறது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வைக்கம் சத்தியாகிரகத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். அந்த வகையில், இது உண்மையிலேயே ஒரு மக்கள் இயக்கமாகும். கே.அப்துல் ரஹ்மான்குட்டி, பரீத் சாஹிப், எம்.கே.அப்துல் ரஹீம் மற்றும் பலர் இஸ்லாமிய சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ஜார்ஜ் ஜோசப் போன்றவர்கள் சத்யாகிரகத்தை ஏற்பாடு செய்வதில் திரைக்குப் பின்னால் முக்கிய பங்கு வகித்தனர். சீக்கிய மதத்தைச் சேர்ந்த சகோதரர்கள் வைக்கத்தில் ‘லங்கர்’ (பொது சமையல் கூடம்) கூட அமைத்தனர். எனவே, சத்யாகிரகம் உண்மையான மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருந்தது.

**முற்போக்கான மாற்றம் தேவை**

1865 ஆம் ஆண்டிலேயே, பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பொதுச் சாலைகளைப் பயன்படுத்த அனுமதிக்க திருவிதாங்கூர் சமஸ்தானம் முடிவு செய்தது. இன்னும், ஆறு தசாப்தங்களுக்குப் பிறகும், அந்த முடிவை நடைமுறைப்படுத்த ஒரு மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது. சிறந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அதை அடைய, சமூக பார்வையிலும் செயல்பாடுகளிலும் முற்போக்கான மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய மக்கள் இயக்கங்களும் தேவைப்படுகிறது. இதைத்தான் நமக்கு வைக்கம் சத்யாகிரகம் சுட்டிக் காட்டுகிறது.

## மாநில அரசுகளின் அதிகாரங்களைத் தகர்க்கும் ஆளுநர்கள்!

**சமூக மாற்றங்களை கொண்டு வந்த ஆளுமைகள்**

அரசியல் இயக்கங்கள் இருந்தாலும் சமூக இயக்கங்களுடன் அவற்றுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்ற வாதத்தை உறுதிப்படுத்தும் போக்கு பொதுவாக உள்ளது. வைக்கம் சத்யாகிரகம் அந்த கருத்தோட்டத்தை நிராகரித்து விட்டது. இந்தியாவின் பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்கள் உயர்ந்த ஆளுமைகளின் விளைவாக வந்தவைதான். ராஜாராம் மோகன் ராய், ஈ.வெ. ராமசுவாமி நாயக்கர், ஜோதிபா பூலே, ஸ்ரீ நாராயண குரு மற்றும் பலர் நாட்டில் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதில் நிச்சயமாக பெரும் பங்கு வகித்துள்ளனர். இருப்பினும், வைக்கம் சத்தியாகிரகம் ஒரு தனி நபரைச் சுற்றி வரவில்லை. சமூக, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்ட அனைவரின் கூட்டு முயற்சியே அதன் வெற்றியை உறுதி செய்தது.

**மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரிய அரசுகள்**

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கங்களின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்ற அரசியல் அமைப்புகளே இன்று தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களிலும் ஆட்சியில் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியார், அண்ணா தலைமையில் இருந்த திராவிட இயக்கம், கலைஞர் போன்றவர்களால் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைந்துள்ளது. இந்தப் பெருமைக்குரிய மரபை தமிழகத்தில் திமுக அரசு முன்னெடுத்துச் செல்கிறது. கேரளாவில், நமது மறுமலர்ச்சி இயக்கங்களின் உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மை போன்ற விழுமியங்களை உள்வாங்கி, நவீன கேரளாவை உருவாக்க இடதுஜனநாயக முன்னணி அரசு முயற்சிக்கிறது. வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் இந்த இரண்டு அரசியல் அமைப்புகளும், அவர்கள் தலைமையிலான அரசுகளும் ஒன்று கூடுவது மிகவும் பொருத்தமானது.

100 ஆண்டுகளுக்கு முன்பு, சமுதாயத்தின் பெரிய நலன்களை நிறைவேற்ற செய்யச் வைக்கம் சத்தியாகிரகம் நடத்தப்பட்டது. நமது வரலாறு, மொழி, கலாச்சாரங்கள், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, ஜனநாயகம் மற்றும் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுள்ள அரசியலமைப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க, நாட்டின் மிகப்பெரிய நலன்களுக்காக ஒன்றுபட வேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமூக மற்றும் அரசியலில் வெவ்வேறு கொள்கைகளை உடையவர்கள் பொது நலனுக்காக ஒன்றிணைந்த ஒரு இயக்கத்தை பற்றி நாம் நினைவுகூரும்போது, நமது காலத்திற்கு பொருத்தமான பொது நன்மையை அடைய நாமும் இதுபோன்ற இயக்கங்களை ஒன்றிணைக்க பாடுபடுவது கட்டாயமாகும்.

**பொதுநலன்களுக்காகப் போராடுவோம்**

அப்போதுதான் சாதிவெறி, தீண்டாமை, சமூகத் தீமைகள், மூடநம்பிக்கைகள், மனிதாபிமானமற்ற சடங்குகள் போன்றவற்றுக்கு எதிரான போராட்டம் கூர்மையடையும். இன்றும் கூட இத்தகைய பிற்போக்கு சிந்தனைகள் மற்றும் நடைமுறைகளை பிரதான நீரோட்டத்தில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மதம், மாநிலம் போன்றவற்றின் அடிப்படையிலும் நம்மை பிரிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. நாம் போராடி சுதந்திரம் அடைந்தாலும், இன்று நமது இறையாண்மைக்கு சவால் விடும் பொருளாதார உறவுகளுக்கும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கும் தள்ளப்பட்டுள்ளோம். இவை அனைத்திற்கும் எதிராக பொதுநலன் கருதி போராட வேண்டும். பொறுப்புள்ள அரசியல் அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் என்ற முறையில் காலம் அதை நம்மிடம் கோருகிறது.

**மதவாத அரசால் மாற்றியமைக்கப்படும் விழுமியங்கள்**

நமது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அது நிலைநாட்டும் மதிப்புகள், நமது புகழ்பெற்ற சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உருவான விழுமியங்கள் மீது கடுமையான தாக்குதல் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வைக்கம் சத்யாகிரகத்தின் மதச்சார்பற்றதன்மைபற்றிகுறிப்பிட்டிருந்தேன். இது நமது சுதந்திரப் போராட்டத்தின் மிகவும் போற்றுதலுக்குரிய மதிப்புகளில் ஒன்றாகும். இது நமது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், நமது மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. நமது அரசியலமைப்புச் சட்டம் மநுஸ்மிருதியால் மாற்றப்பட முயற்சிகள் நடக்கின்றன. நமது கூட்டாட்சி அமைப்பு ஒற்றையாட்சி அமைப்பாக மாற்றப்பட்டு வருகிறது.

மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக, சுதந்திரமான, இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற மோசமான அனைத்து முயற்சிகள் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும், அவற்றிற்கு எதிராகப் போராட வேண்டும்.

கடந்த காலங்களில் இதே போன்ற பிரச்சனைகளை நாங்கள் எதிர்கொண்டோம். அந்த நேரத்தில், நாங்கள் அதை எதிர்கொண்டு ஒன்றாக நின்று வென்றோம். தற்போதும், இதே போன்ற பிரச்சனைகளை நாம் எதிர்கொள்கிறோம். இந்த நேரத்தில் இந்த சக்திகளால் ஏற்படும் நெருக்கடியை நாம் கைகோர்த்து நின்று எதிர்ப்பதில் உறுதியாக உள்ளோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரங்களை தகர்ப்பதற்காக ஆளுநருக்கு உரிய அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

**ஆளுநர்களின அதிகார அத்துமீறல்**

மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக,சட்டமன்றத்தால்நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.

ஒரு மாநிலச் சட்டம், பொதுப் பட்டியலில் உள்ள ஒரு விஷயத்தைத் தொடும். மத்திய சட்டத்தில் உள்ள எந்த விதிகளையும் மீறாமல் இருக்கும் வரை, வேறுவிதமாகக் கூறினால், மத்திய சட்டத்தின் அம்சங்களுக்குள் நுழையாத பட்சத்தில், மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஆளுநரால் அனுப்ப முடியாது. இந்த மசோதாவில் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணாக ஏதும் இருப்பதாக ஆளுநர் கருதினாலும், அந்த மசோதாவை தனது கருத்துக்களுடன் மீண்டும் சட்டமன்றத்திற்கு அனுப்புவதே ஆளுநருக்கு உள்ள ஒரே வாய்ப்பு.

**நீதிமன்ற அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் ஆளுநர்கள்**

**இது தொடர்பாக, ஒரு சட்டத்தை அரசியலமைப்பு ரீதியாக தீர்மானிக்கும் இறுதி அதிகாரம் இந்த நாட்டில் உள்ள அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இந்த உண்மையை மறந்துவிட்டு, இந்த நாட்டில் ஆளுநர் பதவியை வகிக்கும் சிலர், அரசியல் சாசனத்தால் சட்டப்பூர்வமாக நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள துறைகளை ஆக்கிரமித்து வருகின்றனர்.**

**ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் சரியாகப் பிரித்து வைத்துள்ள அதிகாரங்கள், ஆளுநரைப் போன்ற ஒரு நியமன அதிகாரியின் தலையீட்டை அனுமதிக்கும் பட்சத்தில், நாட்டில் ஜனநாயக அரசியல் நிலவுவதைப் பற்றி சிந்திப்பது பயனற்றதாக இருக்கும். இந்த நாட்டில் அரசியலமைப்பின் கீழ் செயல்படும் எந்த ஆளுநருக்கும் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மசோதாக்களை காலவரையின்றி வைத்திருக்கும் அதிகாரமோ உரிமையோ கிடையாது. இது நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் நிலைப்பாடு என்று உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**சட்டத்தின் இந்த நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் அவ்வப்போது நினைவுகூறும் போதும் ஜனநாயக செயல்முறைக்கு குந்தகம் விளைவிப்பதை மறைமுக நோக்கமாக கொண்ட ஆளுநர்கள், மசோதாக்களை பரிசீலிக்காமல் அவற்றை முடக்கி வைக்கிறார்கள்.அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.**

**கேரள ஆளுநரின் பழிவாங்கும் செயல்!**

கேரள மாநிலத்தில், ஆளுநர் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட எட்டு மசோதாக்களை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போட்டுள்ளார். ஆளுநரின் இத்தகைய செயலற்ற தன்மையை நீதிமன்றத்திற்கு கேரள அரசு கொண்டு சென்ற போதுதான் அந்த எட்டு மசோதாக்களில் ஒரு மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார், மீதமுள்ளவற்றை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பினார். ஆளுநர் தனது சட்ட விரோத செயல்களை தெரிந்தே செய்கிறார் என்பது தெளிவாகிறது. அதையும் மீறி, அவர் அவ்வாறு நடந்துகொள்வதுஎன்பது அவரது அரசியல் பழிவாங்கலை மட்டுமே காட்டுகிறது. நாட்டு மக்கள் இத்தகைய பழிவாங்கும் செயல்களை திறம்பட எதிர்கொண்டு தோற்கடிப்பதில் வல்லவர்கள் என்பதை அதிகார மையங்கள் நினைவில் கொள்வது நல்லது.

வைக்கம் சத்யாகிரகத்தின் இந்த நூற்றாண்டு விழா, இந்த முன்னோக்கிய பயணத்தில் புத்துணர்ச்சியையும் வலிமையையும் அளிக்கும்.

இவ்வாறு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் அவ்வுரையில் குறிப்பிட்டிருந்தார்.


கலைஞர் நூற்றாண்டு விழா
கலைஞர் 100 1924 - 2023
முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை
முன்னிட்டு
திமுக பொறியாளர் அணி
நடத்தும்
மண்டல அளவிலான
பேச்சுப்போட்டி மற்றும் பட்டிமன்றம்
நாள் : 30.12.2023 சனிக்கிழமை
இடம் : திருவண்ணாமலை
முன்னிலை
மாண்புமிகு கு.பிச்சாண்டி அவர்கள்
சட்டப்பேரவை துணைத் தலைவர்
வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து சிறப்புரை
மாண்புமிகு
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்
உயர்கல்வித்துறை அமைச்சர்
தலைமையேற்று சிறப்புரை
மாண்புமிகு எ.வ.வேலு அவர்கள்
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்
காலை 9.00 மணி முதல்
எஸ்.கே.பி.பொறியியல் கல்லூரி, திருவண்ணாமலை.
மதியம் 02.00 மணி முதல்
அருணை பொறியியல் கல்லூரி, திருவண்ணாமலை.
பேச்சுப் போட்டி தலைப்புகள்
1. “தமிழ்ச் சமூகத்தின் மீதான கலைஞரின் அன்பு”
2. “பெரியார், அண்ணா வழியில் கலைஞரின் சாதனைகள்”
3. “கலைஞரால் தலை நிமிர்ந்த தமிழகம்”
சிறப்பு நடுவர்கள்
தமிழ்ப் பேச்சு எங்கள் மூச்சு புகழ்
கார்த்திக் ராஜா
நாராயண கோவிந்தன்
பிரிட்டோ
பட்டிமன்றம் தலைப்பு
“டாக்டர் கலைஞரின் சமூக நலத் திட்டங்களால் அதிகம் பயன் அடைந்தவர்கள்” ஆண்களா? பெண்களா?
நடுவர் கலைமாமணி பேராசிரியர்.முனைவர் கு.ஞானசம்பந்தன்
பேச்சாளர்கள்
ஆண்களே
முத்தமிழ்ச் சுடர் பேராசிரியர்.முனைவர் மகா சந்தர்
செல்வ. கண்ணன்
பெண்களே
சொல்லரசி முனைவர். எழிலரசி
தமிழ்ச்சுடர் பேராசிரியை முனைவர். முத்துலெட்சுமி
கலந்து கொள்ளும் மாவட்டங்கள்
திருவண்ணாமலை தெற்கு
திருவண்ணாமலை வடக்கு
இராணிப்பேட்டை
வேலூர்
திருப்பத்தூர்
தருமபுரி கிழக்கு
தருமபுரி மேற்கு
கிருஷ்ணகிரி கிழக்கு
கிருஷ்ணகிரி மேற்கு
சேலம் கிழக்கு
சேலம் மேற்கு
சேலம் மத்தியம்
கள்ளக்குறிச்சி வடக்கு
கள்ளக்குறிச்சி தெற்கு
விழுப்புரம் தெற்கு
விழுப்புரம் வடக்கு
திமுக பொறியாளர் அணி
வெற்றி டிஜிட்டல் 9894009840

## தென் மாவட்ட மழை வெள்ளத்திலும் பா.ஜ.க.வினர் அரசியல் செய்கிறார்கள்!

# தமிழ்நாடு அரசு மக்களை மீட்க பெரு முயற்சியுடன் செயல்பட்டது!

## சன் நியூஸ் ‘கேள்விக் களம்’ பகுதியில் மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் கே.கனகராஜ் ஆணித்தரம்!

சென்னை, டிச. 30 -

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் “நிவாரண நிதி கோரிக்கையை திசை திருப்பும் ஒன்றிய அரசு? பேரிடரிலும் அரசியல் கொந்தளிக்கும் எதிர்க்கட்சிகள் வெள்ளச் சேத ஆய்விலும் தமிழ்நாடு அரசை விமர்சித்த நிர்மலா சீதாராமன்” என்ற தலைப்பில் நடைபெற்ற ‘கேள்விக் களம்’ பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர்களில் ஒருவரான கே.கனகராஜ் விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:**

இங்கே பேசியவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். கடைசி வருடம், 2021-2022 ஆண்டு, ஜி.எஸ்.டி. வரியில் 59 சதவிகிதம். ஜி.எஸ்.டி.யில் ஒன்றிய அரசின் பங்களிப்பு என்ன இருக்கு? நமது மக்கள் தானே பொருட்களை வாங்குகிறார்கள். அந்த வரி தானே உடனுக்குடன் கொடுக்கிறார்கள். பெரிய நிறுவனங்கள் ஏப்ரல் 1-ஆம் தேதி சம்பாதிக்கின்ற லாபத்திற்கும் சேர்த்து அடுத்த வருடம் மார்ச் 31-ஆம் தேதி கட்டினால் போதும், ஆனால் நாம் ஏப்ரல் 1-ஆம் தேதி வாங்கும் பொருள்களுக்கும் வரி கட்டுகிறோம்.

நிர்மலா சீதாராமன் நாட்டினுடைய முக்கியமான அமைச்சர். அவர் “புள்ளி இரண்டு சதவிகிதம் எனக்குச் சொல்லவில்லை, அதனால் கெட்டுப்போச்சு என்று சொல்கிறார்கள்” என்று கூறினார்.

ஒரே ஒரு விஷயத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், அல்லது தங்கம் தென்னரசு இவர்கள் எல்லாம் சொன்னால் நிர்மலா சீதாராமன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒருத்தர் சொல்லி இருக்கிறார்,

The None of the weather predection models anticipated the 90 cm rainfall witnessed in kayalpatinam municipality in tuticorin district of tamilnadu last week அப்படி என்று சொல்லிட்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்

The ministry of earth sciences plans to setup two high performance computers in Noida and Pune to enhance the weather forecasting accuracy.

ஆனால், துல்லியமாக சொன்னார்கள் என்று நிர்மலா சீதாராமன் கூறினார். புள்ளி இரண்டு சதவிகிதம் வேறுபாடு இருந்து அதற்காக தமிழ்நாடு அரசு அங்கலாய்த்ததாக கூறியது நிர்மலா சீதாராமன் கூட விமர்சிக்கிறார்.

இன்றைக்கு இதனை அறிவியல் துறையின் முன்னாள் செயலாளர் எம். ரவிச்சந்திரன் கூறியுள்ளார். அந்தக் கூட்டத்தில் ஒன்றிய புவியியல் துறை அமைச்சர் கிரன் ரிஜுவும் கலந்துகொண்டிருக்கிறார். இப்போது திருமதி நிர்மலா சீதாராமன் மன்னிப்பு கேட்க வேண்டும்.

கட்டாயமாக கோவிலில் வேலை செய்கின்ற எல்லோருக்கும் நியாயமான சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. அதில் ஏதாவது இருந்தால் நாங்கள் தான் முதலில் சங்கம் வைப்போம்.




ஆனால் ‘உண்டியலில் போடாதே, தட்டில் போடு’ என்பதை வேறு யாராவது சொல்லி இருந்தால் என்ன சொல்லி இருப்பார்கள். நான் கேட்பது ‘எனக்கு கொடுக்கவில்லை, எனவே நீங்கள் ஒன்றிய அரசாங்கத்திற்கு வரி கொடுக்காதீர்கள்’ என்று சொன்னால் அதனை விட்டு விடுவீர்களா? ஒரு முக்கியமான பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவர், அவர் உண்டியலில் போடாதே தட்டில் போடு என்று சொன்னால் இப்படி ஒரு கோரிக்கை வைத்தால் இது எப்படி இருக்கிறது?

நிர்மலா சீதாராமன் எதற்காக இங்கு வந்தார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மேல் நிறைய விமர்சனம் வந்தபிறகு ஏதோ கரிசனத்தோடு சொல்வார்கள் என்பதற்காக வந்தார். மற்றபடி அவர்கள் வருவதற்கான அடிப்படையான காரணங்கள் எதுவுமில்லை.

ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் இங்கே வந்து எல்லா ஆலோசனைகளை செய்துவிட்டுப் போய்விட்டார்.

அதேபோல தமிழிசை சௌந்தரராஜன், அவர் இங்கே வந்து அவர் வடித்த கண்ணீர், ஏற்கனவே வந்த மழைத் தண்ணீரை விட அதிகமாகப் போய்விட்டது.

புதுச்சேரியில் நான் ரேஷன் அரிசிக்கு பதிலாக காசு தருகிறேன். அது நல்ல மாடல் என்று சொல்லி, பத்து மாதம் காசு கூட ஒரு பைசா கூட கொடுக்கவில்லை. பெரிய போராட்டம் செய்த பிறகு நான்கு மாதம் கொடுத்தார்கள், இந்த மாதப் பணம் இதுவரை வரவில்லை. தமிழிசை சௌந்தரராஜன் தான் நிர்மலா சீதாராமனிடம் சென்று அழ வேண்டும்.

அடுத்து ‘காசு மெல்ல கொடுப்போம், மெல்ல கொடுப்போம்’ என்று சொல்கிறார்கள். இந்த மாதத்துக்கு கொடுத்தார்கள். உடனே கொடுத்தார்கள். ஆனால் இன்டர் மினிஸ்ட்ரியல் டீம் சென்று பார்த்துட்டு கொடுத்தார்கள். அவர்கள் ரிசர்வ் பேங்குக்கு ஒரு லட்டர் அனுப்பி இருக்கிறார்கள். 2020, 21, 22இல் கொடுத்ததை இந்த வருடம் தான் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த வருடம் லோக் சபாவில் கேள்வி நம்பர் 4591 தேதி 28.3.2023 என்.கே.பிரேமசந்திரனுக்கு பதிலில், அந்த டீம், வந்த பிறகு தான் கொடுக்கனும். ஆனால், என்.டி.ஆர்.எப். இல் இருந்து கொடுக்கலாம் என்று அதில் இருக்கிறது.

பொதுவாக டீம் வரும்; பணம் கொடுப்பாங்க; ஆனால் ஸ்டேட் கவர்ன்மெண்டிடம் போதுமான பண்ட் இல்லை என்றால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் என்.டி.ஆர்.எப்.பில் இருந்து அட்வான்சா பணம் கொடுக்க வேண்டும். ஐ.எம்.சி.டி.க்காக காத்திருக்கக் கூடாது, உள்ளூர் மட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் அவர்கள் பாதிப்பிலிருந்து வெளியே வருவதற்கு இந்தப் பணத்தை கொடுக்கலாம் என்று அவர்கள் அதில் சொல்லி இருக்கிறார்கள்.

நிர்மலா சீதாராமன், வந்தார், பார்த்தார், நேற்று கூட ‘இரண்டரை லட்சம் பேருக்கு உடனே விவசா யத்திற்கு காப்பீட்டுத்தொகை கொடுத்து விடுங்கள்’ என்று.

அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, விவசாயம் என்பது வெறும் பயிர் மட்டும் அழிந்துவிடவில்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள், தண்ணீர் ஆற்றை கடந்து போகின்ற போது நிலத்தில் இருந்து அந்த வண்டல் மண்ணையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. திரும்பி வரும்போது மணலைக் கொண்டு வந்து கொட்டிவிட்டது. அடித்துக் கொண்டு போன இடத்திலும் மணலை போட வேண்டும். திரும்ப சேர்த்த மணலையும் வெளியே எடுத்து விட்டுப் போட்டால் மட்டும் தான் நிலத்தைப் பாதுகாக்க முடியும்.

வீடுகளை நாம் பார்க்கும்போது டி.வி., ப்ரிட்ஜ், போர்வை, துணி, சாப்பாட்டுக்கு வைத்திருந்த பொருள்கள், கால்நடை, வாகனம் எல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டன.

வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நிர்மலா சீதாராமன் ஒரு பவர் புல் போஸ்டிங்கில் இருக்கிறார். நம்மிடம் கூறிய அதே பாடி லாங்வேஜோடு, அப்பா நீங்கள் கொடுத்த பொருள்கள் எல்லாம் இப்படி வெள்ளத்தில் போய் விட்டது. நீங்கள் என்ன செய்யலாம் என்றால் கார்ப்பரேட் சோஸியல் ரெஸ்பாலிட்டி என்று வைத்து இருக்கிறீர்களே பண்ட், இவர்கள் தான் உங்களுக்கு லாபம் சம்பாதித்து கொடுக்கிறார்கள், அதில் ஒரு பகுதியை ஒதுக்கி நஷ்டஈடா கொடுங்கள் என்று சொல்லலாம்.

தமிழ்நாட்டில் யாராவது, பா.ஜ.க.வினர் நிர்மலா சீதாராமனிடத்தில் ஒரு பைசாவாவது உடனடியாக கொடுங்கள் என்று கேட்டார்களா? இல்லை! ஆனால் எடப்பாடி பழனிச்சாமி மாநில அரசுக்கு நிதி கொடுங்கள் என்று கேட்டிருந்தார். ஒன்றிய அரசு நிதி கொடுக்காதது தவறு தான். வாய்ப்பு இல்லை என்று நிர்மலா சீதாராமன் கூறுகிறார்.

இந்தியாவில் புயல் பாதிப்பு வரும் என்ற அறிவிப்பு அறிவித்த உடனேயே 14, 15 ஆகிய இரண்டு தேதிகளில் ஒரு மாத காலத்தில் குழந்தை பிறக்கும் என்று வாய்ப்பு இருக்கக்கூடிய பதிவு செய்திருக்கக்கூடிய பெண்கள் அனைவரையும் அழைத்து வந்து மருத்துவமனையில் சேர்த்தது மாதிரி ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை இந்தியாவிலேயே வேறு எங்கேயும் நடந்ததில்லை. தமிழ்நாட்டில் தான் இது நடந்து இருக்கிறது.

கொள்கைப் பிரச்சினையில் கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் நாங்கள் நியாயத்திற்காக குரல் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம். வேலை நேரம் மாற்றத்தில் கூட நாங்கள் குரல் கொடுத்தோம். ஆனால் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் அரசியலுக்காகக் கூட குரல் கொடுக்கவில்லை.

நான் இந்த மழை பெய்து முடிந்து பிரச்சினை என்று வந்த உடனே திருநெல்வேலியில் இருந்தேன். அதிகாரிகள் அமைச்சர்கள் கீழே நின்றார்கள். ஆனால், அவ்வளவு நின்ற பிறகும் மக்கள் பரிதாபமாக பாதிக்கப்பட்டார்கள். ஏன் என்றால் வெள்ளம் அந்த அளவிற்கு அதிகமாக இருந்தது.

கையில் உணவு இருக்கிறது; எதிரே பசித்தவர்கள் இருக்கிறார்கள்; கொடுக்க முடியவில்லை. டைரக்டர் மாரிசெல்வராஜ் குடும்பத்தினர் பாதிக்கப்படுகிறார்கள். அமைச்சர் எங்கே இருக்கிறார் என்று கேட்டு இவர்கள் எல்லாம் ஏற்பாடு செய்த பிறகும் அவர்களை மீட்க முடியவில்லை. உங்களுக்குத் தெரியும் ரயில் இருந்தது. ஆனால் அவர்களுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு முடியவில்லை. அத்தனை பேரும் சேர்ந்தும் செய்யமுடியாத சில காரியங்கள் இருந்தன. ஆனால் இதற்கெல்லாம் அரசோ, மற்ற அதிகாரிகளோ குறைந்து போனார்கள் என்று சொல்ல முடியாது.

முழங்கால் அளவு தண்ணீரில் ஒரு நர்ஸ் உட்கார்ந்து ஏரலில் பிரசவம் பார்த்து இருக்கிறார். அதற்குப் பின்னால் மூன்று நாள் அங்கேயே இருந்தார். கழுத்தளவு தண்ணீரில் ஒருவர், அவர்களுக்கு வேண்டியதை கொண்டு போய் கொடுத்து இருக்கிறார்கள்.

எனவே என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் சரியாகவே நடந்தது. அமைச்சர்கள் அதிகாரிகள் களத்தில் இருந்தும் வெள்ளத்திற்கு முன் ஈடுகொடுக்க முடியவில்லை. அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் மாட்டிக்கொண்டார். தூத்துக்குடி ஆட்சியர் தண்ணீரில் மாட்டிக்கொண்டார். இவர்கள் எல்லாம் அதனை எதிர்பார்க்காமல் நடந்துவிட்டன.

ஒன்றை மட்டும் சொல்கிறேன், மாநில அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்தார்கள் என்பதுதான் உண்மை. எனவே ஒன்றிய அரசாங்கம் இப்போதாவது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பா.ஜ.க. அந்தக் கட்சியினர் எதையாவது கொஞ்சம் சேர்த்து வைத்தார்கள் என்றால் அவற்றையெல்லாம் நிர்மலா சீதாராமனும், தமிழிசை சௌந்தரராஜனும் அழித்து விட்டார்கள். இந்த அரசியலில் தி.மு.க.விற்கு இலாபம் தான். ஆனால் இதில் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதினால் தான் ஒன்றிய அரசு உடனடியாக நிதி வழங்கிட வேண்டும் என்று திரும்ப திரும்ப கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கே.கனகராஜ் அவர்கள் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டத்தில் கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு நெல்லை மத்திய மாவட்டம் மேலப்பாளையம் நியாய விலை கடையில் வைத்து வெள்ள நிவாரண நிதி ரூபாய் 6000 மற்றும் நிவாரண பொருட்களை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் வழங்கினார். நிகழ்வில் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா, கூட்டுறவு பேரங்காடி தலைவர் பல்லிக்கோட்டை செல்லதுரை, தொ.மு.ச.சைபுதீன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், நவநீதன், சாகுல்,மற்றும் ரம்ஜான் அலி, ஆறுமுகராசா, துபாய் இஸ்மாயில்,டி.எஸ்.எம்.ஒ. பாதுஷா, மாரிபாண்டி, மூப்பன், அப்துல்காதர்,சேக்மைதீன், ரகுமான்ஷா, சேக்உஸ்மானி, அயூப்கான், அனித்தா, தொப்பிகாஜா, அலி,சைபு நிஷா, கன்னையாபாண்டியன், ஆறுமுகம், அபூபக்கர், அஸ்கர் அலி,உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டத்தில் கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்ப அட்டை தாரர்களுக்கு வெள்ள நிவாரணத் தொகை ரூபாய் 6000 மற்றும் நிவாரணப் பொருட்களை மீனாட்சிபுரம் நியாய விலைக் கடையில் வைத்து பாளை மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.வழங்கினார். நிகழ்வில் மாநகர துணைச் செயலாளர் சுதாமூர்த்தி, துணை மேயர் கே.ஆர்.ராஜ், 29 வார்டு பிரதிநிதிகள் வேல்ராஜா, சிவசுப்பு, சுப்பையா, அப்ராணந்தம், பேச்சி, திருப்பதி, சங்கர், இசக்கிபாண்டி, மைதீன், பூபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மரக்காணத்தில்

## ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

*மரக்காணம், டிச. 30 -*

*மக்களுடன் முதலமைச்சர் இருக்கின்ற காரணத்தால் விண்ணப்பம் செய்தவர்கள் முதலமைச்சரிடம் மனுகொடுத்துள்ளதாக தன்னம்பிக்கையுடன் மக்கள் இருப்பதாக மரக்காணத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை அமைச்சர் செஞ்சிமஸ்தான்தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சி, நகராட்சிகளில் மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் முகாம்நடைபெற்று வருகிறது.*

*விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பேரூராட்சி சார்பில் மக்களுடன் முதல்வர் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் மரக்காணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.*

*திண்டிவனம் சப் கலெக்டர் திவ்யான்ஷு நிகம் தலைமை தாங்கினார்.மரக்காணம் பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார் முன்னிலை வகித்தார்.*

*பேரூராட்சி செயலாளர். முருகன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் மக்கள் குறை தீர்க்கும் முகாமினை தொடங்கி வைத்தார்.*


*இதைதொடர்ந்து முகாமில் எரிசக்தி மற்றும் மின் சாரத்துறை, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, காவல் மற்றும் மாற்றுத்திறனாளிகள்நலத் துறை, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நலன் உள்ளிட்ட துறையிலிருந்து அரசு அதிகாரிகள் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது கணினி மூலம் பதிவு செய்தனர்.*

*இதைத் தொடர்ந்து மரக்காணம் பேரூராட்சி தி.மு.க. இளைஞரணி நிர்வாகி வெங்கட்ராமன் சாலை விபத்தில் உயிரிழந்தார். இல்லத்திற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று அவருடைய திரு உருவப்படத்திற்கு மலர் மரியாதை செலுத்தி அவரது குடும்பத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 25 ஆயிரம் நிதி உதவி வழங்கி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம்.ஆர். சபாபதி

**டிசம்பர் 30 (2009)**



**சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**‘தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நூற்றாண்டு கண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் பண் பாடுவோம்!

பதினான்கு வயது பள்ளி மாணவனாக இருந்த பொழுதே இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர்க்குரல் கொடுத்த அந்தத் தமிழ் ஆர்வம் தான் இளம் வயது கலைஞரை உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

தமிழார்வம் அவரை இயற்கை அன்னை அணைத்துக் கொள்ளும் வரையில் தணலாகவே கனன்றுகொண்டிருந்தது என்று உறுதிப்படக் கூறலாம். தடைகள் எவைவரினும் அவைகளைத் தகர்த்துத் தனது இலக்கை அடைந்தவர் அவர்.

அவர் இயற்றியுள்ள சங்கத் தமிழும், தீட்டியுள்ள குறளோவியமும், தமிழன்னைக்கு அணிகலனாகத் திகழ்ந்து, தமிழ்க் கூறும் நல்லுலகம் இருக்கும் வரையில் தமிழ் மணம் பரப்பும் என்பதில் ஐயமில்லை.

1949 ல் அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், ஏழை எளியவர்களின் புதுவாழ்வுக்காகப் பணிபுரிவதையே திட்டமாகக் கொண்டிருக்கிறது.

தனது பவள விழாச் செய்தியாக தன்னைப் பற்றி கலைஞர் பதிவிட்டது பின் வருமாறு:

“பொதுவாழ்வில் மிகச் சிறு பிராயத்திலேயே அடியெடுத்து வைத்த நான், பூ மழைகளை மட்டுமல்ல; புயல்களையும், பூகம்பங்களையும் தாங்கித் தாங்கி அனைத்தையும் ஒன்றுபோலச் சமமாகக் கருதும் உணர்வினை இயல்பாகவே பெற்றிருந்த காரணத்தினால்தான் பெரியாருக்குத் தொண்டனாகவும் அண்ணாவுக்குத் தம்பியாகவும் இருக்கக்கூடிய தகுதியைப் பெற முடிந்தது.”

கொளுத்தும் வெயிலையும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் திராவிட இயக்கத்தின் தலைவர்கள், மற்றும் தொண்டர்களின் தூய உழைப்பால் உருவானதுதான் திராவிட இயக்கம்.

மேனாள் தமிழ்நாடு முதல்வர் தி.மு.க. தலைவர் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதல் முறையாக தி.மு.க. மாநில மாநாடு 1970ஆம் ஆண்டு நடைபெற்றது.

அதில் உரையாற்றிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஐம்பெரும் கொள்கைகளைக் கழகத்தவர் தீவிரமாகப் பின்பற்ற அறிவித்தார், அவை பின்வருமாறு:

**“அண்ணா வழியில் அயராது உழைப்போம்.**

**ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.**

**இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்.**

**வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.**

**மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி.”** என்ற ஐம்பெரும் கொள்கைகளை முன்வைத்தார்.

1971 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆற்றிய வானொலி உரையில், “ சாதாரணமானவர்கள் நாங்கள், சாதாரண மக்களுக்காக உழைப்பதற்கு முன் வந்திருப்பவர்கள். எங்களை எங்கள் அண்ணன் “ எதையும் தாங்கும் இதயம்” கொண்டு கடமை போற்றி, கண்ணியம் வளர்த்து, கட்டுப்பாடு குலையாமல் நடப்பதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அந்த அண்ணனின் வழிநின்று அயராது உழைப்போம். தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்” என முழங்கினார்

**சி.சேரன்**
*தலைமைச் செயற்குழு உறுப்பினர், சென்னை மேற்கு மாவட்டம்*



நினைவு ஆற்றல், உழைப்பு ஆற்றல், உணர்வு ஆற்றல், படைப்பு ஆற்றல் , தமிழ் ஆற்றல் இவற்றின் மொத்த உருவம் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். ஆற்றல்களின் பல்கலைக் கழகம் அவர். சமூக விடுதலைக்காகப் போராளியாகவே வாழ்ந்தவர். எத்திசையிலிருந்து எதிர்ப்பு ஈட்டிகள் வந்தாலும் அதன் முனை முறிக்கும் வல்லமையைப் பெற்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்கள்.

கலைஞர் என்றதும் முதலில் நினைவுக்கு வருவது மிகச் சிறந்த ஆட்சி நிர்வாகி. அரசியல் சாதுர்யம். எப்பேற்பட்ட சூழலிலும் எந்தப் பதற்றமும் இல்லாமல் அவர் அணுகும் விதம் அபாரம்.

1969ஆம் ஆண்டு, ஒன்றியத்திற்கும், மாநிலங்களுக்குமிடையேயான உரிமைகளை ஆய்வு செய்வதற்கு, நீதிபதி இராஜமன்னார் குழு அமைத்தார் கலைஞர். ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே எவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என ஆராய்வது, அந்தக் குழுவின் நோக்கமாகும். அந்தக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 1974 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். அத் தீர்மானத்தின் மீது, சட்டமன்றத்தில் நான்கு நாட்கள் தீவிர விவாதம் நடைபெற்றது. மாநிலங்கள் சுயமரியாதையோடு வாழ, அந்த தீர்மானம் இன்றளவும் துணை நிற்கிறது.

இருமொழிக் கொள்கைத் தீர்மானம், கரந்தை தமிழ்ச் சங்கம் இயற்றிய தீர்மானத்தையும், மூத்த தமிழறிஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ‘தமிழை செம்மொழியாக்க வேண்டும்’ என்ற நீண்ட நெடுங்கால கோரிக்கையை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரத்தை, ஜூன் 6, 2004 தேதியன்று தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். செம்மொழி அந்தஸ்தை தமிழுக்குப் பெற்றுத்தர பெரும் முயற்சிகளை எடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

குறளோவியம் கண்டவர் கலைஞர், அவருக்கு நாம் செய்யும் கடமையானது என்ன? திருக்குறளைக் குழந்தைப் பருவமுதலே முழுவதும் கற்கச் செய்ய வேண்டும். நம் வாழ்க்கை நடைமுறையோடு திருக்குறளைப் பொருத்திப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு இயக்கத்தவர் கரங்களிலும் திருக்குறள் புத்தகமும், இன்னொரு கையில் குறளோவியமும் கையணிகளாக இருக்க வேண்டும்.

முன்னர் பாராட்டியவர்கள், பின்னர் அவரைப் பற்றி வசைப் பாடும் போது அவர்களது வசையை மறந்துவிட்டு ஏற்கனவே அவர்கள் பாராட்டியதை நினைத்துக் கொண்டு மகிழ்வடைவது நிம்மதி தருவது என்று பெருந்தன்மையின் கலங்கரை விளக்காக என்றும் திகழ்பவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ எனும் முதுமொழிக்கிணங்க இன்றளவும் எண்ணற்ற ஏழை எளிய நடுத்தரக் குடும்பத்தினருக்கு மானிய விலையில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தை கண்டு, நியாய விலைக்கடைகளே இல்லாத கிராமப்புற ஏழைகளின் வறுமையைப் போக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் அண்ணாவின் தாரக மந்திரமான “ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற வைர வரிகளை மெய்ப்பித்துக் காட்டியவர் முத்தமிழறிர் கலைஞர் அவர்கள்.

1967 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் பேரறிஞர் அண்ணா சொன்னது, ரூபாய்க்கு 3 படி அரிசி என்றார், அதனை நிறைவேற்ற சென்னையிலும், கோவையிலும் பரீட்சார்த்த முறையில் அமல் படுத்தினார். பல்வேறு இடர்கள் காரணமாக மூன்று படி அரிசித் திட்டத்தை தொடர்ந்து நடத்த இயலவில்லை, அறிஞர் அண்ணா மறைவிற்கு பின்னர் முதல்வராக பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நுகர் பொருள் வாணிபக்கழகம் கண்டு, தொடர்ந்து கிராமம் தோறும் நியாயவிலைக் கடைகளைத் திறந்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரேஷன் கார்டுகளை தந்து, அவரவர்கள் நியாய விலைக்கடைகள் மூலமாக அரிசியை முன்னர் குறைந்த விலையிலும் பின்னர் இலவசமாக பெற்று வருகின்றனர். இதன் மூலம் பசிப்பிணி போக்கப்பட்டது, இத்தகைய அரிய திட்டத்தை இப்பொழுது பல மாநிலங்களும் கடைபிடிக்கத் தொடங்கியுள்ளனர். இந்திய ஒன்றியத்திற்கே வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு வழிகாட்டியாக விளங்குகிறார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றால் அது மிகையாகாது.

1976 இல் டெல்லி அரசின் அடக்குமுறை கோலோச்சிய அவசரகால நிலை; கழக ஆட்சி டெல்லி அரசால் கலைக்கப்பட்டது. எங்கும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதியில்லை; பத்திரிக்கையில் எழுதக் கூட அனுமதியில்லை; தணிக்கை செய்யப்பட்ட செய்திகளே வெளி வந்து கொண்டிருந்தன. அச்சமயம் தலைவரவர்கள் நடத்தி வைத்த திருமண நிகழ்ச்சிகளே மாநாடுகள் போல நடைப்பெற்றது, கழகத் தோழர்கள் பலரைச் சந்திக்கவும் செய்திகளைக் கலந்து பேசவும் வாய்ப்பாக அமைந்தது.

கலைஞர் அவர்கள் தமது 14 ஆம் வயதில் பொது வாழ்வில் ஈடுபட்டு கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக எத்தனையோ சாதனைகளைத் தமிழ்நாட்டில் புரிந்துள்ளார் என்றாலும், சென்னைக்கு தண்ணீர் தரும் புழல் ஏரியில் உடைப்பு என்று அதிகாரிகள் தெரிவித்த நிலையில், வர இருந்த வெள்ள பேராபத்தை தனது 75 வயதிலும் தளராது விடியற் காலை என்று கூடப் பார்க்காமல் எழுந்து அரசு இயந்திரத்தை வேகமாக முடுக்கிவிட்டு, நேரடியாக கசிவு ஏற்பட்ட பகுதிக்கு வந்திருந்து சில மணி நேரங்களில் உடைப்பைத் தடுத்து நிறுத்தி சென்னை மக்களைப் பேராபத்திலிருந்து காப்பாற்றியது ஓர் இமாலயச் சாதனையாகும்.

சட்டமன்றத்தில் புள்ளி விவரங்களை வழங்குவதிலாகட்டும், மேடையில் பழைய சம்பவங்களைத் தொகுத்துச் சொல்வதிலாகட்டும்; கலைஞரின் நினைவாற்றலைக் காண்கின்ற எவருக்குமே ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

ஐந்தரை அடி உயரம் கொண்டவர்தான் கலைஞர் என்றாலும் அவரது ஆற்றலின் உயரம் இமயமலையை மிஞ்சும்.

காவிரி பாயும் தஞ்சையில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்து, இன்று உலகம் பூராவும் பரவி இருக்கின்ற பத்துக் கோடி தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவராக கலைஞர் விளங்குகிறார் என்றால் அதற்குக் காரணம் அவரது ஆற்றல்தான். அவரும் அவரது ஆற்றலும் நிலைத்து நின்று தமிழ் கூறும் நல்லுலகுக்கு பல நூறாண்டு காலம் பயனளிக்க வேண்டும்.

வாழ்க முத்தமிழறிஞர் கலைஞர் புகழ்.




உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் ”மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமை பார்வையிட்டு, மனுதாரர்களுக்கு ஒப்புகைச்சான்று வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைவர் க.திருமலைச்சாமி, துணைத்தலைவர் வெள்ளைச்சாமி உட்பட பலர் உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் - நீக்கல்

# 2024 ஜனவரி 12ஆம் தேதி வரை நீட்டிப்பு!

## தலைமைக் கழக அறிவிப்பு

1.1.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டு, 26.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுத்து கால அட்டவணை வெளியிட்டது இந்திய தேர்தல் ஆணையம்.

தற்போது, அக்கால அட்டவணையில் திருத்தம் செய்து வருகிற 12.01.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் வழங்கியதுடன், வாக்காளர் இறுதி பட்டியல் வருகிற 22.1.2024 அன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கை வெளியிட்டுள்ளது தேர்தல் ஆணையம்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம்தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், 12.01.2024 ஆம் தேதிக்குள் உரிய தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை தலைமைக் கழகத்துக்கு அவ்வப்போது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.12.2023

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

கிளாம்பாக்கம் பேருந்து முனையம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

*காஞ்சிபுரம், டிச. 30 -*

வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலி னுக்கு வழியெங்கும் பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நந்திவரம் - கூடுவாஞ்சேரி, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள என்.பி.ஆர். திருமண மண்டபத்தில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

இன்று (30.12.2023 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் 86 ஏக்கர் பரப்பளவில் ரூ. 400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” என்ற புதிய பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் நாம் நாளும் உயிராய் போற்றி விளங்கும் தமிழ்நாடு முதல்வர் அன்புத் தலைவர் அவர்களுக்கு,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் முதல் வண்டலூர் வரை வழியெங்கும் பிரமாண்டமான முறையில் எழுச்சியான வகையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும், மாவட்டம் முழுவதும் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் சிற்றூர்களில் இருந்து கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அலை கடலென திரண்டு வந்து, தங்கள் கரங்களில் கழகத்தின் இரு வண்ண கொடி பதாகைகளை ஏந்தி மேளதாளம் பேண்டு வாதியம் முழங்க பிரம்மாண்டமான முறையில் உற்சாக வரவேற்பு அளிப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

வருகிற ஜனவரி மாதம், 3வது வாரத்தில் சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் வருங்காலத்திற்கு வழிக்காட்டும் வசந்த மலராய் திகழும் நம் நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் 10,000க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு இம்மாநாட்டை பிரமாண்ட மான மாநாடாக வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் வருகிற 15.1.2024 திங்கட்கிழமை அன்று கழக கொடி தோரணங்களை அழகுற கட்டி, கழகக் கொடியினை கழக முன்னோடிகளை வைத்து ஏற்றி, பொதுமக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கி தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பறை சாற்றும் விழாவாக தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழாவினை வழக்கம் போல மிகவும் எழுச்சியுடனும் உற்சாகத்துடனும் மிகச் சிறப்பான முறையில் சமத்துவ பொங்கல் விழாவாக கொண்டாடுவது என்றும், அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் உள்ள மக்கள் அனைவரும் பொங்கல் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கண்டுகளிக்கும் வகையில் தமிழர்களின் வீர விளையாட்டுப் போட்டிகள் கோலப் போட்டி உட்பட பல்வேறு வகையான போட்டிகளை நடத்துவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கி றது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் 3 உயர்நிலைப் பள்ளிகளில்

# ரூ.5 கோடியில் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, டிச. 29 -*

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஒன்றியம் அரளிக்கோட்டை, திருப்புவனம், இளையான்குடி ஒன்றியம் சாத்தனூர், ஆகிய அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 4 கோடியே 88 லட்சத்தி 70 ஆயிரம் மதிப்பில் கூடுதல் வகுப்பு கட்டிடங்கள் கட்டப்பட உள்ளது. இதற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. கூடுதல் பள்ளி கட்டிட திட்டம் பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது .

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அடிப்படையில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் என்னற்ற பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். பல்வேறு துறைகள் இதில் முன்னேறி வருகின்றது. இதில் கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளை தனது இரு கண்களாக பாவித்து அதற்கான பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நாட்டின் எதிர் காலத்திற்காக தூண்களாக விளங்கக்கூடிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் அழியாச் செல்வமான கல்வி செல்வத்தினை அதிகம் பெற வேண்டும் என்ற உயர்நோக்கத்தில் தொலைநோக்கு சிந்தனையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து மாணவர்களை பயன்பெற செய்து வருகிறார்கள்.

போட்டி திறமைகள் நிறைந்த தற்பொழுது நவீன காலத்தில் அதற்கேற்ப மாணவ, மாணவிகள் தங்களது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் கல்வியினை படிக்க வேண்டும். இதை மனதில் கொண்டு பெற்றோர்களுக்கு பொருளாதார ரீதியான சிரமங்களை கொடுக்காமல் முதல்வர் அவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழலில் அனைத்து பள்ளிகளையும் உருவாக்கி வருகிறார்கள்.

இதற்காக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் வகையில் சிவகங்கை மாவட்டத்தில் கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த பள்ளி கட்டிடங்களில் நல்ல வகுப்பறைகள், சமையலறைகள் கழிப்பறைகள், உட்பட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் 8 பள்ளிகளில் ரூபாய் 12 கோடி யே71 லட்சத்து 88ஆயிரம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது இதில் முதற்கட்டமாக சிங்கம்புணரி ஒன்றியம் அரளிக்கோட்டையில் ரூபாய் 82 லட்சத்து 72 மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும் திருப்புவனம் அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளியில் 2 கோடியே 97 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் 14 கூடுதல் வகுப்பு கட்டிடங்களும் இளையாங்குடி ஒன்றியம் சாத்தனூரில் ரூபாய் ஒரு கோடியே5 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் 5 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும் மொத்தம் 23 கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது.

இதற்கான பணிகளை ஒப்பந்ததாரர்கள் நல்ல முறையில் கட்டி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவ - மாணவிகள் இந்த சூழலில் நன்றாக படித்து நாட்டின் நல்ல பொறுப்புள்ள அதிகாரிகளாக வரவேண்டும். என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.




நீலகிரி மாவட்டம் உதகை இத்தலார் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அருணா, அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# பேரிடர் கால நிதி நெருக்கடியும் மோடியின் அரசியலும்!

வரலாறு காணாத பெரு மழையின் காரணமாக சுமார் பத்து நாட்கள் இடைவெளியில், தமிழ்நாடு இரு பெரும் பேரிடர்களை கண்டுள்ளது. எட்டு மாவட்டங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. தமிழ்நாடு அரசின் போர்க்கால நடவடிக்கைகளின் விளைவாக மக்களின் இயல்பு வாழ்க்கை கூடுமான விரைவில் மீண்டிருக்கிறது.

இந்நிலையில் பேரிடர் பாதிப்புகளை சீர் செய்யும் நோக்கில் மிக்ஜாம் புயல் மற்றும் வெள்ள பாதிப்பிற்கு இடைக்கால நிவாரணமாக ரூ.7,033 கோடியும், நீண்ட கால பாதிப்புகளை சரி செய்ய ரூ. 12,659 கோடியும், தென் மாவட்ட பேரிடருக்கு இடைக்கால நிவாரணமாக ரூ.2,000 கோடியும் என மொத்தம் ரூ.21,692 கோடி தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

06/12/2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களின் வெள்ள பாதிப்பை சீர் செய்ய 5,060 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டது.

07/12/2023 அன்று வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய வந்த ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களிடம் அதே கோரிக்கையை நேரடியாக முதலமைச்சர் அவர்கள் முன் வைத்தார். 14/12/2023 அன்று வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த ஒன்றியக் குழுவிடம் இடைக்கால நிவாரணமாக 7,033 கோடி மற்றும் நீண்ட கால பாதிப்பை சீர் செய்ய 12,659 கோடியை வழங்க வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள். 19/12/2023 அன்று பிரதமர் அவர்களுடனான முதலமைச்சரின் சந்திப்பில் மேற்கண்ட தொகையுடன், தென் மாவட்ட பேரிடருக்கு உடனடி நிவாரணத் தொகையாக 2,000 கோடியை வழங்க வலியுறுத்தப்பட்டது.

21/12/2023 அன்று முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்ட பேரிடர் பாதிப்புகளை ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர் சந்திப்பின் வழியாக, பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என கோரினார். 24/12/2023 அன்று பிரதமர் அவர்களுடனான தொலைபேசி உரையாடலில் தமிழ்நாட்டிற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 21,692 கோடியை விடுவிக்க, முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். 27/12/2023 அன்று தென் மாவட்ட பேரிடர் பாதிப்புகளை ஆய்வு செய்ய வந்த ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களிடம், தமிழ்நாடு நிதி அமைச்சர் அவர்கள் 72 பக்க விரிவான அறிக்கையை வழங்கி நிவாரண நிதியை விடுவிக்க கோரினார்.

தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சரும், நிதி அமைச்சரும் ஏறத்தாழ ஏழு முறைக்கு மேல் அலுவல் பூர்வமாக பேரிடர் நிவாரண நிதியை விடுவிக்க கோரியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உள்ளிட்டோர் பொதுவெளியில் அதே கோரிக்கையை முன் வைத்தும், “எங்கள் வரி எங்கள் உரிமை” என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் உரிமை குரல் எழுப்பிய பின்னரும், இந்த நிமிடம் வரை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட மோடி அரசு ஒதுக்கவில்லை.

இந்நிலையில் ஒன்றிய அரசு 1000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கி விட்டது என பாஜகவை சேர்ந்தோர் தவறான செய்திகளை பரப்பி வருகிறார்கள்.

07/12/2023 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு ட்விட்டர் ‘எக்ஸ்’ பதிவுகளை வெளியிட்டார்.

1) **தமிழ்நாட்டின் வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள 2023–24 நிதியாண்டிற்கான மாநில பேரிடர் நிவாரண நிதியின் இரண்டாவது தவணைத் தொகை ரூபாய் 450 கோடியை முன்கூட்டியே விடுவிக்கிறோம்**
2) **சென்னை மாநகருக்கான வெள்ள தடுப்பு கட்டமைப்புகளை உருவாக்க தேசிய பேரிடர் தடுப்பு நிதியிலிருந்து ரூபாய் 561 கோடியை விடுவிக்கிறோம்**

மேற்கண்ட இரண்டு நிதியைத்தான் ஒன்றிய அரசு இதுவரை அறிவித்துள்ளது. இதில் தேசிய பேரிடர் தடுப்பு நிதி சென்னை, புனே உள்ளிட்ட ஏழு மாநகரங்களுக்கு வழங்குவது தொடர்பாக கடந்த ஜூன் மாதமே அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன் துணைக் குழு கூட்டம் ஆகஸ்ட் மாதத்தில் நடந்து முடிந்து விட்டது. தாங்கள் முன்பே அறிவித்ததை பேரிடர் காலத்தில் அறிவித்தது போல செய்தியை வெளியிட்டார்கள்.

அடுத்ததாக மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு இரண்டாவது தவணையாக விடுவித்த 450 கோடி ரூபாய், நிதிக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கொடுத்தே ஆக வேண்டிய பங்குத்தொகை. ஆக தமிழ்நாடு சந்தித்த இரண்டு பேரிடருக்கும் ஒன்றிய அரசின் வசம் உள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்த ஒரு நிதியையும் அவர்கள் ஒதுக்கவில்லை.

### பேரிடர் மேலாண்மை சட்டம்

2004 ஆம் ஆண்டு சுனாமி பாதிப்பை தொடர்ந்து, திமுக அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பேரிடர் மேலாண்மை சட்டத்தை 2005 ஆம் ஆண்டு உருவாக்கியது. இச்சட்டம் மூன்று பிரதான நிதிகளை வரையறுக்கிறது

பிரிவு 46 - தேசிய பேரிடர் நிவாரண நிதி, பிரிவு 47 - தேசிய பேரிடர் தடுப்பு நிதி, பிரிவு 48 - மாநில பேரிடர் நிவாரண நிதி.

### மாநில பேரிடர் நிவாரண நிதி

இது ஒவ்வொரு மாநிலமும் பேரிடரை எதிர்கொள்ள நிலையாக இருக்கும் நிதி. இதில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படும் நிதி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 75% ஒன்றிய அரசும், 25% மாநில அரசுகளும் பங்களிப்பு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை நிதிக் குழு தீர்மானிக்கும். பேரிடர் நடந்தாலும் நடக்கவில்லை என்றாலும் இந்தத் தொகையை வழங்க வேண்டியது ஒன்றிய அரசின் கடமை. இந்த நிதியை மாநில அரசு நிர்வகிக்கும்.

### தேசிய பேரிடர் மேலாண்மை நிதி

இது ஒன்றிய அரசு நிர்வகிக்கும் நிதி, ஒரு குறிப்பிட்ட பேரிடருக்கான பாதிப்பும் செலவும் மாநில பேரிடர் நிவாரண நிதியை விட அதிகமாக ஏற்படும் சூழலில், கூடுதல் நிதியை தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டும் என பேரிடர் மேலாண்மை சட்டம் வரையறுக்கிறது.

15வது நிதிக் குழுவின் பரிந்துரை அடிப்படையில், 2023-24 நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதி 1200 கோடி. இதில் 900 கோடி ஒன்றிய அரசு சட்டப்படி வழங்க வேண்டிய பங்குத்தொகை. ஆனால் தமிழ்நாட்டின் இரண்டு பேரிடர்களில் 8 மாவட்டங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு 1200 கோடியை விட பல மடங்கு அதிகம் என்கிற காரணத்தால், இது வரையில் 21,692 கோடியை நாம் கோரியுள்ளோம்.



**சூரியா கிருஷ்ணமூர்த்தி,**
கழக செய்தி தொடர்பாளர்

உதாரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் & செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும் 24,25,000 குடும்பங்களுக்கு, தலா 6,000 ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கு மட்டும் 1,486 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மட்டுமே இந்த ஆண்டுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதியை விட 2,86 கோடி ரூபாய் அதிகம். எனவே இரண்டு பேரிடருக்குமான பாதிப்பை மாநில பேரிடர் நிவாரண நிதி மட்டும் கொண்டு ஈடு செய்ய முடியாது என்பது வெளிப்படையாக தெரிகிறது. ஆனாலும் ஒன்றிய அரசு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியை ஒதுக்குவதற்கு விடாப்படியாக மறுக்கிறது.

இந்த அநீதியை கேள்வி கேட்டால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி பாஜகவின் படை பரிவாரங்கள் வரை, ஆய்வு செய்யாமல் பாதிப்புகளை மதிப்பீடு செய்யாமல் எப்படி நிதி வழங்குவார்கள் ? என்று ஒரே கேள்வியை கேட்கிறார்கள்.

### குஜராத் உதாரணம்

17/05/2021 அன்று குஜராத்தை தாக்டே புயல் தாக்கியது. 19/05/2021 அன்று குஜராத் மாநிலத்தில் புயல் பாதித்த பகுதிகளை பிரதமர் மோடி நேரடியாக ஆய்வு செய்து, உயிரிழந்தவர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2,00,000 மற்றும் காயம் அடைந்தவர்களுக்கு தலா 50,000, கூடுதலாக குஜராத் மாநிலத்திற்கு உடனடி இடைக்கால நிவாரணமாக தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து 1,000 கோடியும் அறிவித்தார். முழுமையான ஆய்வுக்குப் பிறகு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குஜராத் மாநிலம் பாதிக்கப்படும்போது அமைச்சரவைக் குழு ஆய்வு செய்யட்டும் என்றோ, ஒன்றிய அரசு அலுவலர்கள் குழு ஆய்வு செய்யட்டும் என்றோ, சேத மதிப்பீடுகள் தயாராகட்டும் என்றோ மோடி அரசு காத்திருக்கவில்லை. நிதியை ஒதுக்கி விட்டு தான் ஆய்வுகளை மேற்கொண்டார்கள். ஆனால் தமிழ்நாடு பேரிடரை எதிர்கொள்ள நிதி கேட்கிறபோது மட்டும் அமைச்சரவை குழு ஆய்வு செய்ய வேண்டும், ஒன்றிய அரசு அலுவலர்களின் குழு ஆய்வு செய்ய வேண்டும், சேத மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டும் என்றெல்லாம் காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள். “எங்கள் வரி எங்கள் உரிமை” என்று இதனை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் கேள்வி கேட்கிற போது, பாஜகவை காப்பாற்றும் வகையில் அவர்களது குரலிலேயே எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பேசுகிறார்.

குஜராத்தை புயல் தாக்கிய போது அம்மாநிலத்தின் மாநில பேரிடர் நிவாரண நிதியில், நிதி இல்லாத காரணத்தால் தான் உடனடியாக 1,000 கோடியை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கினார் என, தமிழ்நாடு மீதான மோடியின் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு நியாயம் சொல்ல சிலர் வருகிறார்கள். ஆனால் புயல் தாக்குவதற்கு சுமார் 20 நாட்களுக்கு முன்பு தான் (29/04/2021) மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு ரூபாய் 529 கோடியை விடுவித்தது பாஜக அரசு. ஆக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய போது குஜராத் மாநில அரசிடம், மாநில பேரிடர் நிவாரண நிதி கையிருப்பில் இருந்தது என்பது தான் உண்மை.

துன்பப்படும் எல்லோருக்கும் துணை நிற்கிற தத்துவம் தான் திராவிட தத்துவம். எனவே நம்முடைய கேள்வி எல்லாம் குஜராத்திற்கு ஏன் நிதி ஒதுக்கினீர்கள் என்பது அல்ல, மாறாக அதையே முன் உதாரணமாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கலாமே, அதை ஏன் மறுக்கிறீர்கள் என்பதுதான்.

### தொடரும் அநீதி

2015 - 2022 வரை 8 பெரிய பேரிடருக்கு நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு கோரியது ரூ.1,27,655 கோடி, ஒன்றிய அரசு கொடுத்தது ரூ.5,844 கோடி, வெறும் 4.61%. 2023 ஆம் ஆண்டு பேரிடரையும் கணக்கில் கொண்டால் தமிழ்நாடு அரசு கோரியது ரூ. 1,49,347 கோடி, ஒன்றிய அரசு கொடுத்தது ரூ. 5,844 கோடி வெறும் 3.9%.

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.19,572.80 கோடி. இதில் குஜராத்திற்கு ரூ.1,168 கோடி (6%) மத்திய பிரதேசத்திற்கு ரூ.1,605 கோடி (8.2%) உத்திர பிரதேசத்திற்கு ரூ.1,705 கோடி (8.71%) தமிழ்நாட்டிற்கு ரூ.900 கோடி (4.5%)

2014 முதல் 2023 வரை மாநில பேரிடர் நிவாரண நிதியாக குஜராத் அரசுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 7.192 கோடி. தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 6,419 கோடி. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குஜராத்தின் மக்கள் தொகை ரூ. 6.03 கோடி, தமிழ்நாட்டின் மக்கள் தொகை ரூ. 7.21 கோடி.

மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தால் தமிழ்நாடு குஜராத்தை விட கூடுதல் நிதியை பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் பேரிடர் பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டால், இரண்டாவது நீளமான கடற்கரை பரப்பு, நூற்றாண்டில் 50க்கும் மேற்பட்ட பெரும் புயல்கள், கடந்த பத்து ஆண்டுகளில் தேசிய பேரிடர் நிவாரண நிதி அதிகம் தேவைப்பட்ட மாநிலம் ஆகியவற்றின் காரணமாக உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகியவற்றை விட கூடுதலான நிதியை தமிழ்நாடு பெற வேண்டும். ஆனால் எதனை அடிப்படைக் கணக்கீடாகக் கொண்டாலும், தமிழ்நாடு குறைவான நிதியே பெறுகின்ற அநீதியான சூழல் தொடர்கிறது.

### மோடி அரசிடம் உள்ள நிவாரண நிதி வாய்ப்புகள்

ஒன்றிய அரசிடம் நிதி இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு அரசுக்கு கூடுதல் நிதி ஒதுக்க மறுக்கிறது என்றும் கருத இடமில்லை. பேரிடர் நிவாரணம் வழங்குவதற்காக மட்டும் மூன்று பிரதான நிதி வாய்ப்புகள் மோடி அவர்களிடம் உள்ளன.

1) **தேசிய பேரிடர் மேலாண்மை நிதி – இதற்கு 15 வது நிதி ஆணையம் ஒதுக்கீடு செய்த தொகை மட்டும் ரூ.54,770 கோடி.**
2) **பிரதமரின் தேசிய நிவாரண நிதி – பொதுமக்களின் பங்களிப்புடன் உருவாக்கப்படும் இந்த நிதிக்கு, 2021–22 நிதியாண்டில் மட்டும் ரூ.805.38 கோடி ரூபாய் மக்களால் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.175.89 கோடி மட்டுமே பாதிப்புகளுக்கு நிவாரணமாக ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது. 27/10/2022 அன்றைய கணக்கின்படி பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் ரூ.5,556.83 கோடி இருப்பு உள்ளது.**
3) **பி.எம்.கேர்ஸ் நிதி – ஒன்றிய அரசால் விளம்பரப்படுத்தப்பட்டு வசூல் செய்யப்பட்ட இந்த நிதி, அரசாங்கத்திற்கு சொந்தமானது அல்ல, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வரம்பிற்குள் வராது, மத்திய தலைமை கணக்குத் தணிக்கையால் (சிஏஜி) தணிக்கை செய்யவும் முடியாது என்று டெல்லி உயர்நீதி மன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஆனால் கொரோனா பாதிப்பு தொடர்பாக இந்நிதியிலிருந்து நிவாரணம் வழங்கும் அறிவிப்பை மோடி அவர்களே வெளியிட்டார், அந்த வகையில் இதிலிருந்து அவரால் நிவாரணம் அளிக்க முடியும் என்பது வெளிப்படை. இந்நிதியிலும் மிகக்குறைந்தபட்சம் சிலநூறு கோடியேனும் நிதி இருக்கும்.**

ஆகவே பேரிடர் பாதித்த தமிழ்நாட்டிற்கு நிவாரண நிதி வழங்குவதற்கான பல்வேறு வாய்ப்புகளும் சூழலும் பிரதமர் மோடியிடம் உள்ளது, வழங்க வேண்டும் என்கிற மனது மட்டும் தான் இல்லை.

### மடைமாற்றும் உத்தி

இதையெல்லாம் மடை மாற்றுகிற வகையில், ஆய்வு செய்த பின்னர் தான் நிதி ஒதுக்குவார்கள் என்று மோடி அரசுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, நிதிக்குழு ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 1,000 கோடியாவது தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யுங்கள் என வலியுறுத்தினார் பேரறிஞர் அண்ணா.

2017 ஆம் ஆண்டு ஒக்கி புயல் தமிழ்நாட்டை தாக்கிய போது, 13,520 கோடி ரூபாயை நிவாரணமாக கோரியது அன்றைய அதிமுக அரசு. அரசு கோருகிற தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும் என 28/12/2017 அன்று பேரிடர் பாதிப்பை ஆய்வு செய்ய வந்த பரமேஸ்வர் பாலி அவர்களின் தலைமையிலான குழுவுக்கு கடிதம் எழுதினார், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாட்டை கஜா புயல் தாக்கிய போது ரூ.15,000 கோடி அளவிற்கு நிவாரணத் தொகை கோரியது அதிமுக அரசு. மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டிய தொகையில் ரூ. 354 கோடியை மட்டும் ஒதுக்கீடு செய்தது மோடி அரசு. அன்றைய அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இதனைக் குறிப்பிட்டபோது, ஒன்றிய அரசின் பாகுபாட்டை கண்டித்தவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள். தமிழ்நாட்டின் நலனுக்காக எல்லா நாளும், எல்லாச் சூழலிலும், உறுதியோடு நின்ற இயக்கம் நம்முடைய கழகம். அண்ணா பெயரில் கட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள், இதையெல்லாம் உணர வேண்டும்.

### கணக்கு கேட்கும் அதிகாரம்

இந்த அநீதிகளை எல்லாம் மூடி மறைக்கும் வகையில் டெல்லியில் கூடக் குறைய ஒரு மணி நேரம் பத்திரிக்கையாளரை கூட்டி வைத்து, அரசியலையும் அவதூறையும் அள்ளி வீசி இருக்கிறார் ஒன்றியத்தின் நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள்.

தமிழ்நாடு அரசின் செலவுக்கு கணக்கு கேட்டிருக்கிறார். மாநில அரசு செலவு செய்யக்கூடிய ஒவ்வொரு ரூபாய்க்கும் தணிக்கை உண்டு, குறிப்பாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து செய்யப்படும் செலவுகள் அனைத்தும் மத்திய கணக்கு தணிக்கைக்கு (சிஏஜி) உட்படுத்தப்பட்டு, அதன் நகல் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கும், ஒன்றிய நிதித்துறை அமைச்சகத்திற்கும் அனுப்பப்படும். இதனை பேரிடர் நிதிகள் குறித்து 2015 ஆம் ஆண்டு ஒன்றிய உள்துறை அமைச்சகம் வகுத்த வழிகாட்டி நெறிமுறைகள், பத்தி 32 தெளிவாக வரையறுக்கிறது.

இதனை எல்லாம் அறியாதவர் அல்ல அவர். அறிந்தும் கணக்கு கேட்கிறார் என்றால், அது தமிழ்நாட்டிற்கு தான் இழைத்திருக்கும் அநீதியை மறைப்பதற்கான உத்தியே அன்றி வேறில்லை.

### கடமை தவறும் ஒன்றிய நிதியமைச்சர்

பேரிடர் காலத்தில் ஒன்றியத்தின் நிதித்துறை அமைச்சர் ஆற்ற வேண்டிய கடமைகளில் முக்கியமானது, பேரிடர் பாதித்த பகுதிகளில் வாழும் பொது மக்களின் கடன் குறித்து எடுக்க வேண்டிய முடிவு.

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 பிரிவு 13, பேரிடர் பாதித்த பகுதிகளில் பொதுமக்களின் கடன்களில் தள்ளுபடி, சலுகை போன்றவற்றை வழங்குவது குறித்து தேசிய அளவிலான அமைப்பு முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

சென்னை வெள்ளத்தின் போது 37,00,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களது கடன்களில் தள்ளுபடி கூட அல்ல, மூன்று மாதம் தளர்வு வழங்க வேண்டும் என 14/12/2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசும், ஒன்றிய நிதித்துறை அமைச்சரும் செய்ய வேண்டிய ஒரு கடமையை, முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்திய பிறகும், இதுநாள் வரையில் அவர் செய்யவில்லை.

மாறாக வாழ்வாதாரம் மொத்தத்தையும் இழந்து, பேரிடரில் மக்கள் துடித்துக் கொண்டிருக்கும் போது, இதைப் பேரிடராக அறிவிக்கும் வழக்கம் இல்லை என டெல்லியில் இருந்து மக்கள் தலையில் இடியை இறக்குகிறார். தூத்துக்குடிக்கு வந்து பெருமாள் ஊர்வலத்திற்காக துடித்து நிற்கிறார்.

பேரிடர் காலத்தில் மக்களைக் காக்கிற கடமைகளையும் பொறுப்புகளையும் மாநிலங்களிடம் விட்டுவிட்டு, அதற்கு அடிப்படையான நிதி மூலதன வாய்ப்புகளை ஒன்றியத்தில் குவித்து வைத்துள்ள இந்தியக் கூட்டாட்சியின் முரணை, மோடி தொடர்ந்து பெரிதுபடுத்துகிறார். அதில் அதிக அநீதியை சந்திக்கும் மாநிலமாக இருக்கிறது தமிழ்நாடு.

பேரிடர் கால நிதி ஒதுக்கீட்டு அநீதிகளை மூடி மறைக்க, நிர்மலா சீத்தாராமனில் தொடங்கி எடப்பாடி பழனிசாமி வரையில் கண் துஞ்சாது பணியாற்றுகிறார்கள். எல்லா அநீதிகளையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர சொல்ல வேறு ஒன்றும் இல்லை.

---

நல்லிகுப்புசாமி தலைமை! தமிழ்நாடு ஒருங்கிணைந்த

## இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா!

### ஆ.இராசா எம்.பி. - முன்னணியினர் பங்கேற்பு!

*சென்னை, டிச.30-*

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தின் முப்பெரும் விழா - 24-ஆம் ஆண்டு விழா, தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா மற்றும் திருமண வரன் பார்க்கும் விழா இன்று (30.12.2023-சனிக்கிழமை) காலை 8.45 மணி முதல் 5 மணி வரை, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் நினை வரங்கத்தில் நடைபெறுகின்றது.

காலை 8.45 மணிக்கு டி.எஸ்.பாண்டியன், டி. எஸ்.சேதுராம் குழுவின ரின் நாதஸ்வர இசை மற்றும் கே.எஸ்.கண்ணன், கே.எஸ். கே.மணிகண்டன், வி.எல். ஹரிஷ் ஆகியோரின் சிறப்பு தவில் இசை கொண்ட மங்கல இசையுடன் விழா துவங்குகிறது.

விழாவிற்கு தொழிலதிபர் பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி தலைமை வகிக்கிறார்.

செம்பொன்னார் கோவில் எஸ். ஆர். ஜி. ராஜண்ணா, தொழிலதிபர்கள் ஆர். இளங்கோவன், ராஜப்பா இளங்கோவன், ஆர்.பாலவேலாயுதம், தமிழ்நாடு அரசு மகளிர் மேம்பாட்டு நிறுவன நிதி ஆலோசகர் எஸ். ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம். பி. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு திறந்து வைக்கிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தலைவர் ந.மணிவண்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.லட்சுமி நாராயணன் சங்க செயல்பாடு குறித்து விளக்கி பேசுகிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்க பொருளாளர் ஜி.பால்ராஜ் நிதி நிலை அறிக்கையை அளித்து பேசுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்கள், அறிஞர்கள், சாதனையாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் - சட்ட ஆலோசகர் முத்தப்பன் நன்றி கூறுகிறார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சிக்கு இசை இன முரசு மாத இதழ் ஆசிரியர் சேது சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார்.

தொழில் அதிபர் ஏ.பழனியப்பன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோஷ்டியூர் மணிகண்டன், பாகனேரி கார்த்திக், மதுரை சிதம்பர பாரதி, கும்பகோணம் சரவணன், விராலிமலை பூபாலன், சமயபுரம் சேது லட்சுமணன், கோவிலூர் திருநாவுக்கரசு, காரைக்குடி கதிர்வேல் மற்றும் இசை வேளாளர் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இசை வேளாளர் கௌரவ ஆசிரியர் டி.ஏ.வீரமணி நன்றி கூறுகிறார்.

---

உயிரிழப்பு இல்லா புத்தாண்டு: மெரினா, எலியட்ஸ் கடற்கரை சாலையில்

## டிச.31 இரவில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை!

### சென்னை மாநகர காவல்துறை அதிரடி!

*சென்னை, டிச. 30 -*

2024 ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு எப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு சென்னை மாநகர காவல் துறை ‘உயிரிழப்பு இல்லா புத்தாண்டிற்கு முன்னாள்’ என்ற தலைப்புடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி டிச.31ம் தேதி இரவு மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரை பகுதிகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வருவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுகுறித்து சென்னை மாநகர காவல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை: காமராஜர் சாலை மற்றும் எலியட்ஸ் கடற்கரை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள போக்குவரத்து ஏற்பாடுகள் வருமாறு:

★ கடற்கரை உட்புற சாலை 31ம்தேதி இரவு 7 மணி முதல் மறுநாள் அதிகாலை 6 மணி வரை போக்குவரத்துக்காக மூடப்படும். கடற்கரை உட்புற சாலையில் 7 மணி முதல் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படாது. அனைத்து வாகனங்களும் கலங்கரை விளக்கம் சந்திப்பு வழியாக மட்டுமே வெளியேற அனுமதிக்கப்படும்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

## விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாபெரும் கபடி போட்டி!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு தலைமையில்

*விருதுநகர், டிச. 30 -*

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி டிசம்பர் 30 மற்றும் 31 தேதிகளில் விருது நகர் ராமமூர்த்தி ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி மைதானத்தில் நடைபெற இருக்கின்றது இந்த நிகழ்ச்சியில் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்) தங்கம் தென்னரசு (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்) தலைமையில் நடைபெறுகின்றது. விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன் முன்னிலை நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு, துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், (நகர் மன்ற தலைவர்) தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ரமேஷ், துணை அமைப்பாளர்கள் ஜி. வெயில்ராஜ், எம்.சரவணகுமார், ஆர். கார்த்தி, பி.சுந்தர மூர்த்தி, எஸ் ராஜ்குமார், திருச்சுழி ஒன்றிய பெருந்தலைவர் எஸ். பொன்னுத்தம்பி, மாநில வர்த்தக அணி டி.வனராஜா சிவகாசி, மேயர் சங்கீதா, இன்பம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.கே.எஸ். எஸ்.வி.பி. சுப்பாராஜ், துணை மேயர் விக்னேஷ்பிரியா, காளிராஜன், ப.விருதுநகர் யூனியன் சேர்மன் சுமதி ராஜசேகர், விருதுநகர் நகர மன்ற துணைத் தலைவர் தனலட்சுமி, துளசிராமன், காரியாபட்டி ஒன்றிய சேர்மன் உ. முத்துலட்சுமி, சிவகாசி ஒன்றிய சேர்மன் முத்துலட்சுமி, விவேகன்ராஜன், காரியாபட்டி சேர்மன் ஆர்.கே. செந்தில், திருச்சுழி ஒன்றிய சேர்மன் காளீஸ்வரி சமயவேலு, சிவகாசி மாநகர் செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன், சிவகாசி தெற்கு ஒன்றியச் செயலாளர் விவேகன் ராஜ், சிவகாசி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.கோபி, கண்ணன், சிவகாசி வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ். தங்க ராஜா, விருதுநகர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆவுடையம்மாள், திருச்சியில் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம். சந்தான பாண்டியன், நரிக்குடி ஒன்றியச் செயலாளர் கண்ணன், காரியாபட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.கண்ணன், காரியாபட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் எம்.செல்வம், வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் என்ற ஜெயச்சந்திரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஏ.சந்திரன், எம்.மணிவாசகம், பி.செல்வம், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன், ஆர். சுதாகர், எம்.ஆர்.ஜி. சிவசக்தி, எம்.சந்திரன், ஏ.கமலி பாரதி, ஆர்.பால்ராஜ், கே.வி.கந்தசாமி, ஜான் பாட்ஷா, வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், நகர அவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், வடக்கு மாவட்ட விவசாய அணி நேஷனல், ராமர் வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி திருமாறன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு நன்றியுரை நகர் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் ஆற்றுகின்றார். இந்த நிகழ்ச்சியை விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி செய்து வருகின்றனர்.



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவையடுத்து, கோயம்பேட்டில் வைக்கப்பட்டிருந்த அவருடைய உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளுக்கு ஆறுதல் தெரிவித்தார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பொதுப்பணித்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 27.12.2023 அன்று சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரளிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டும் பணியினை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.





தூத்துக்குடி தொகுதி நட்டாத்தியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத்தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உள்பட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



‘உடன்பிறப்புகளாய் இணைவோம்! தமிழர்களாய் தலைநிமிர்வோம்’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கையைத் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் பலனாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர்களும், பொதுமக்களும் கழகத்தில் தங்களை உடன்பிறப்புகளாய் இணைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கான உறுப்பினர் அட்டைகளை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை மேலாளர் ஜெயக்குமார் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.




# உடன்பிறப்பே... 38

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த உடுமலை ப.நாராயணன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# உடுமலை ப.நாராயணன்: எளிமை எரிமலை!




நாள் : 1958-ஆம் ஆண்டு, ஜூலை 5-ஆம் தேதி
இடம் : கோவை - காட்டூர்
நிகழ்வு : கோவை மாவட்ட தி.மு.கழக 3-வது மாநாடு

ஒன்றிய அரசு தென்னகத்திற்குச் செய்திடும் அநீதிகளைச் சித்தரிக்கும் காட்சிகள் இடம்பெற்ற டிராக்டர் பின் தொடர, 2 ஆயிரம் சைக்கிள்கள், பல மோட்டார் சைக்கிள்கள் என முன்னே வர, நடுவில் திறந்த காரில் மாநாட்டுத் தலைவர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, மாநாட்டுத் திறப்பாளர் ஆர்.தர்மலிங்கம் என கழகத்தின் முன்னோடிகள் வருகிறார்கள். இருமருங்கிலும் கூடி நின்று மக்கள் கூட்டம் பூக்கள் தூவி, வாழ்த்தொலி முழங்குகிறது. தலைவர்கள் கையசைத்துக் கொண்டே வர, அவர்களுக்கெல்லாம் முன்னே வழிநடத்திச் சென்று கொண்டிருந்தார் மாவட்டச் செயலாளர் ப.நாராயணன். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும் அவர்தான்.

அவரது வரவேற்பு உரையில் "கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்கள் ஏராளம். அந்த மாற்றங்களில் எல்லாம் பெரும் மாற்றமாக கழகம் கண்டுள்ள வளர்ச்சி, அதில், கோவை மாவட்டம் என்றுமே தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் மற்றெல்லா மாவட்டங்களுக்கும் கிஞ்சித்தும் பின்தங்கியது அல்ல என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தனது உரையைத் தொடங்கினார், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பிகளில் ஒருவரான உடுமலை ப.நாராயணன்.

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், கடைசிவரை அவர் உடுமலைப்பேட்டை யில் வாடகை வீட்டில்தான் குடியிருந்தார்.**

கழகம் முகிழ்ந்தெழுந்து வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் தங்களது உயிர், பொருள், ஆற்றலை அளித்த முன்னோடிகளில் உடுமலை ப.நாராயணன் தனித்த அடையாளம் கொண்டவர்.

### எளிமையும் எரிமலையும்...

கதர் சட்டை, கதர் வேட்டி என எளிமையே அவர் அடையாளம். ஆனால், கழகத்தின் பணிகள் எனில், அவர் களம் காணும் ஏறு. 'எரிமலை' எனப் பெயர் எடுத்தவர். இராஜபுத்திர சிங் சமூகத்தைச் சேர்ந்த நாராயணன் அவர்களின் குடும்பத்தினர் அரசியல் பின்னணி கொண்டவர்கள். இவரது தந்தை திராவிட இயக்கத்தின் மீது பற்றுகொண்டவர் என்றால், சித்தப்பா ஜோதிநாத் சிங், கோயம்புத்தூர் மாவட்ட கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தலைவராகச் செயல்பட்டவர். இப்படியான பின்புலம் காரணமாக, இளம் வயதிலேயே அரசியல் பற்று கொண்டவராக நாராயணன் உருவானார்.

### மாவட்டப் பொறுப்பு

திராவிடர் கழகத்தில் பற்றுகொண்டு இயங்கி வந்த நாராயணன், கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே அடிப்படை உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார். 1955-ஆம் ஆண்டு நடைபெற்ற கழக அமைப்புத் தேர்தலில் ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்வானார். பின்னர் மாவட்டச் செயலாளர் பொறுப்பும் அவரைத் தேடி வந்தது. தன்னலமற்று செயலாற்றுபவர்களுக்கு கழகத்தின் முக்கியப் பொறுப்புகள் வந்து சேரும் என்பது பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே, கழகம் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பிருந்தே தொடர்ந்து வரும் வழக்கம் என்பதற்கு நாராயணன் அவர்களின் பொறுப்பு உயர்வுகளே சான்றாகும்.

### ஆணையிட்ட நேரத்தில்...

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம், 1957 ஆம் ஆண்டு நடத்திய அனைத்துக் கட்சிப் போராட்டம், 1958 ஆம் ஆண்டு அஞ்சலக முற்றுகைப் போராட்டம் என அனைத்துப் போராட்டக் களங்களிலும், "ஆணையிட்ட நேரத்தில் மற்றவர்களை மிஞ்சா விட்டாலும்-குறைந்து நிற்க வில்லை" என அவர் சொற்களிலேயே அவரது களப்பணிகளைச் சுட்டிக்காட்டலாம். 1964 ஆம் ஆண்டு சட்ட நகல் எரிப்புப் போராட்டத்துக்குப் பெயர் அளித்துவிட்டு, குடும்பத்தில் 'சொல்லிக்கொண்டு' பிரிந்தனர் கழகத்தின் தீரர்கள். கோவையில் சட்டநகல் எரித்து கைதானவர்களில் நாராயணனும் இருந்தார்.

ஒருமுறை ஓமந்தூர் ராமசாமி அவர்கள், கோவையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது, தந்தை பெரியாரை இழிவுபடுத்தும் வகையில், அவரது பேச்சு இருந்தது. அந்தக் கூட்டத்தை கவனித்துக் கொண்டிருந்த நாராயணன், அதற்கு மேல் ஓமந்தூராரைப் பேச விடவில்லை. அந்தக் கூட்டத்தையே நடக்கவிடாமல் செய்தார் என்கின்றன, சில குறிப்புகள்.

### துருப்புச் சீட்டு

1962 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலின்போது பொள்ளாச்சியில் இருந்து தேர்வானவர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்ரமணியன். அதன் பின்னர் 1967 ஆம் ஆண்டிலும் பொள்ளாச்சி தொகுதியில் அவர் நிற்கத் திட்டமிட்டார். அவரை எதிர்த்து, பேரறிஞர் அண்ணா களம் இறக்கிய துருப்புச் சீட்டு நாராயணன். தேர்தலுக்கு முன்னர் ஒரு மேடையில், சி.சுப்ரமணியன் அவர்களை வென்று காட்டுவேன் என சவால் விட்டார் நாராயணன். அது தொடர்பாக, பத்திரிகையாளர்கள் சி.சுப்ரமணியன் அவர்களிடம் கேட்கிறார்கள்,

'தி.மு.க. வேட்பாளரான ப.நாராயணன் உங்களை வென்று காட்டுவேன் என்கிறாரே?' என்கின்றனர். அதற்கு அவர், "உடுமலை நாராயணன் என்ன? அந்த வைகுண்ட ராஜனே வந்தாலும், நான்தான் வெற்றிபெறுவேன்"என்றார். ஆனால், கழகத்தின் அலை, உதயசூரியன் சின்னத்தின் வெற்றி வெப்பம் தாங்காமல், கடைசிநேரத்தில் கோபி தொகுதியில் நின்றார் சுப்ரமணியன். ஆனால், அங்கும் கழக வேட்பாளர் பி.ஏ.சாமிநாதனிடம் அவர் தோற்றார் என்பது வரலாறு.

இப்படி, ஈரோடு, திருப்பூர், கோபி என ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தைக் கழகத்தின் கொள்கைப் பாசறையாகக் கட்டிக் காத்தவர் ப.நாராயணன். 1971 ஆம் ஆண்டு தேர்தலிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்கிணங்க பொள்ளாச்சியில் நின்று அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்று காட்டியவர் நாராயணன்.

### கலங்காத விளக்கு

இவருக்கு முன்னர் கோவை மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருந்த சம்பத், 1960-களில் கழகத்தில் உட்கட்சிக் குழப்பத்தை உருவாக்கியபோது, கோவை மாவட்டக் கழகத்தை அரண்போல நின்று காத்தார், நாராயணன். சம்பத் அவர்களுடன் நல்ல நட்பு கொண்டிருந்தாலும், கொள்கை என்கிற வகையில் அண்ணாவின் தம்பியாக அவர் கழக உறுதி கொண்டிருந்தார். நாவலர், சி.பி.சிற்றரசு, முத்தமிழறிஞர் கலைஞர் என கழகத்தின் ஆளுமைகளுடன் நல்ல தோழமை உறவு கொண்டிருந்தவர் அவர். அவரிடமிருந்துதான் கழகத்தின் அடுத்த கட்ட தளகர்த்தர்களான எஸ்.ஜே.சாதிக் பாட்சா, மு.கண்ணப்பன் போன்றோர் உருவாகினர். குடும்பப் பாசத்துடன் அண்ணன், தம்பியாக உறவு வைத்து, அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தார்.

1971 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றிக்குப் பின்னர், சில மாதங்களில் ப.நாராயணன் தனது இறுதிமூச்சை நிறுத்தியது கழகத்தின் பேரிழப்பாக அமைந்தது. கழகத்தின் ஆட்சியில் கண்டுள்ள மாற்றங்களைக் காணாமலேயே அவர் கண் மூடியது கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்பில் ஏக்கமாக இருக்கும்.

### எளிமையே சொத்து

இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், கடைசிவரை அவர் உடுமலைப்பேட்டையில் வாடகை வீட்டில்தான் குடியிருந்தார். சொந்தமாக வாகனம் வைத்துக் கொண்டதில்லை. மிதிவண்டியில்தான் பயணம். யாராவது காரில் வந்து அழைத்துச் சென்றால்தான் உண்டு என வாழ்ந்தவர்.

அவர் சொத்தாக சேமித்தது கழக உடன்பிறப்புகளைத்தான் எனத் தலைமைக் கழகம் வெளியிட்ட இளைஞர் அணி வெள்ளிவிழா மலர் சொல்கிறது. அந்தச் சொந்தங்கள் நாம் என்று சொல்லவும் வேண்டுமோ..?

...துடிக்கும்

## திராவிடத்தின் சொத்து!



'திராவிட இயக்கங்களின் உயிர்நாடி, 'வாசிப்பு இயக்க'த்தில்தான் இருக்கிறது' என்பார் பேரறிஞர் அண்ணா. வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்கப்பட வேண்டும், என்பது அவரது மாபெரும் கனவுகளில் ஒன்று. கழகத்தின் தொடக்க காலங்களில் முடித்திருத்தகம், தேநீர்க் கடைகள் ஆகியவையே கழகத்தின் படிப்பகங்களாக இயங்கின என்பதை நாம் அறிவோம். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் மாபெரும் நூலகக் கட்டமைப்புகளை உருவாக்கினார், முத்தமிழறிஞர் கலைஞர்.

திராவிட இயக்கத்தினரின் வாசிப்பும் பற்றும் உறுதியும், கடந்த காலங்களை நினைவூட்டுகையில் அவற்றைக் கடந்து செல்ல முடியாது. அந்த வகையில், திண்டுக்கல் ரவுண்ட் ரோடு பகுதியில் இயங்கி வருகிறது, 'முத்து முடி திருத்தகம்'.

கருப்பு சிவப்பு வண்ணத்தில் கடையின் பெயர், தந்தை பெரியார் படம், வாசலில் திராவிட இயக்கம், சமூகநீதி, சமதர்மம் பேசக்கூடிய நூல்கள் என கவனம் ஈர்க்கிறது. அவரது கடைக்கு வரக்கூடியவர்கள் மட்டுமல்ல, அங்கு ஆசுவாசமாக அமர நினைப்பவர்களுக்கும் அரசியல் பயிலரங்கமாக 'முத்து முடி திருத்தகம்' அமைந்துள்ளது. இப்படியான மனிதர்களே திராவிடத்தின் சொத்து.

## :ப்ளாஷ்பேக்



### பொன்னாடை புகைப்படம்!


ராஜேஸ்குமார்

1983 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், கம்பம் நகருக்கு அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் வருகை தந்தார். தற்போதைய கழக மாநில கொள்கைப் பரப்புத் துணைச் செயலாளராக இருக்கும் என் தந்தை கம்பம் இரா.பாண்டியன், தளபதி அவர்களை வரவேற்றுப் பொன்னாடை அணிவித்த போது இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. எங்கள் வாழ்நாளில் கிடைக்காத அரிய பொக்கிஷமாக இந்தப் புகைப்படத்தைக் கருதுகின்றோம்.

**-ஜெ.ராஜேஸ்குமார், இளைஞர் அணி, கம்பம் நகரம்**
**- தேனி தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முத்திரை பதித்த 'தனி அரசு'!

**1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் 'தனி அரசு' திங்கள் இருமுறை ஏடு. பின்னர் நாளேடாக வெளிவந்தபோது, அதனை 'கழக தினந்தந்தி' என்று கூறினர். இந்த நாளேட்டில் கழக உறுப்பினர்களின் சட்ட மன்றப் பேச்சுகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வந்தன. திங்கள் இரு முறை ஏடாக இருந்தபோது, 'தனி அரசு'க்குக் கிடைத்த வரவேற்பைவிட, அது தின இதழாக வந்தபோது அதிகமாக இருந்தது. தி.மு.கழகத்தில் 1960-61 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உட்கட்சி விவாதத்தின்போது 'தனி அரசு' தனது தனி முத்திரையைப் பதித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 344




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.